மகிழ்ச்சி

264
1-55
CONNEMARA PUBLIC LIBRARY
20 JUL 1955
MADRAS

Rajam
SVK

நந்தன — மார்கழி.

அ 4 ண

‘பசியின் கொடுமை’யில் குமாரி தங்கம்.

பரிசு

உங்கள் நண்பர்களுக்காக
"மகிழ்ச்சி'' ஓராண்டுச்சந்தா
ரூ. 3 அனுப்பி
புத்தாண்டு—தைப் பொங்கல்
திருநாளைக் கொண்டாடுங்கள்

●

விரைவில் வருகிறது!

விருதுநகர்

நியூமுத்துவில்

சிவாஜி கணேசன்,
கிருஷ்ணன், மதுரம்,
V. K. ராமசாமி,
பத்மினி நடிக்கும்

பணம்

தமிழ்ப் படம்

கதை வசனம்:
மு. கருணாநிதி

டைரக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்

●

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1983—மார்கழி 1.
ஆண்டு 4] 15-12-52 [மாதம் 7

CONNEMARA PUBLIC LIBRARY 2 JUL 1956 MADRAS

பொருளடக்கம்

இயற்கையும்......	3
கலைஞர்களுக்கு வரவேற்பு	5
சினிமா செய்தி	7
முள்—தொடர்கதை	9
எது அழகு?—பரிசுக்கட்டுரை	14
அறிவுப் பூங்கா	16
புதுமாப்பிள்ளை	17
வாழ்வதற்கே வாழ்க்கை	24
கண்ணீருக்கிடையே	25
திடீர்க் குபேரன்—சிறுவர் பகுதி	29
சிகரெட்டும் முத்துவும்	30
இதுநிஜமா?	35
அன்பு மனைவிக்கு...	36
இவைகள் வேண்டும்	40
தெறித்த முத்துக்கள்	41
சந்தேகம் ஒழிக	43
பேபி or கார்	45
நேயர் தபால்	47
சியாமளா—பட விமர்சனம்	49
ஞா. சோ. போட்டி 9	51
காதலா? கடமையா? —கார்டு போட்டி	53

கதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

சாமி பழனியப்பன்—கமலா திருமணம்

'வாரச் செய்தி' துணையாசிரியர் கவிஞர் சாமி பழனியப்பனுக்கும், தோழியர் கமலாவுக்கும் 27—11—52 வியாழக்கிழமை பொன்னமராவதி—புதுப்பட்டியில், காரைக்குடி சப்-ரிஜிஸ்ட்ரார் உயர்திரு. சி. சுப்பையா பீ. ஏ. அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. அன்று பிற்பகல் 4 மணிக்கு உயர்திரு. சி. சுப்பையா பீ. ஏ. அவர்கள் தலைமையில் வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மணமக்கட்கு ஏராளமான வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பெற்றன. ஏராளமான பரிசுகளும் வழங்கப்பெற்றன. கலைமகள் அச்சகம், வாரச்செய்தி அலுவலகத் தோழர்கள் மணமக்கட்கு பணமுடிப்பு ஒன்று வழங்கினர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இலங்கை, மலேயா போன்ற அயல்நாடுகளிலிருந்தும் ஏராளமான வாழ்த்துக் கடிதங்களும், தந்திகளும் வந்திருந்தன. மணமக்கள் நீடு வாழ நாமும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்.

விருதுநகர்

சென்ட்ரலில்

T. K. ஷண்முகம்,
M. V. ராஜம்மா,
V.K. ராமசாமி, சிவதாணு,
சாயிராம், ராஜகாந்தம்,
புளிமூட்டை ராமசாமி,
S. A. நடராஜன் நடித்த

பெண் மனம்

தமிழ்ப் படம்

13—12—52 முதல்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

விருதுநகர்

ஸ்ரீ ராதாவில்

பல்லாயிரக்கணக்கான மக்கள்
பார்த்துப்பார்த்து மனம் பூரிக்கும்

பராசக்தி

ஓடினுள் ஓடினுள் வாழ்க்கையின்
ஓரத்திற்கே ஓடினுள்!
தேடுகிறேன் தேடுகிறேன்
தேடிக்கொண்டேயிருக்கிறேன்!

8-வது வாரமாக இப்பொழுது
நடைபெறுகிறது

இயற்கையும் ஏழையின் விரோதியா?

'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்றபடி எங்கு திரும்பினாலும் ஏழைகளுக்கு இடியா? இடியென்றாலும் இரண்டொருவரைப் பாதிக்கும். ஆனால் புயல்! சுழன்றடிக்கும் சூறாவளி! மணிக்கு 35 மைல் முதல் 75 மைல் வரை வேகம்! எதிர்த்து நிற்க முடியுமா ஏழைகள்?—ஏழைகளின் குடிசைகள்? அம்மியும், ஆட்டு உரலும் ஆகாயத்தில் பறக்கும்போது இந்த ஏழை குடிசை எம்மாத்திரம்? மச்சு வீடுகட்டிமகிழ்ந்துலாவுபவர்களையே மடக்கஙினைத்ததென்றால், இக்குச்சு வீட்டுக்காரர்களை விட்டாவைக்கும்?

நவம்பர் 30உ தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரையில் தஞ்சை ஜில்லா, பிரஞ்சிந்தியப்பகுதி, இலங்கைத்தீவின் வடபகுதி முதலிய இடங்களில்கோரத்தாண்டவமாடிய புயலின் கொடுமையால் எண்ணற்ற மக்கள்—பெரும்பாலும் ஏழைகள் பெரும் துயரத்திற்குள்ளானார்கள். இறந்தவர்கள் தொகைகுறித்துஇதுவரை சரியானதகவலே கிடையாது தஞ்சைஜில்லாவில்மட்டும் கிடைத்த செய்தியை ராஜாஜீ கூறியுள்ளார். மாண்டமக்கள்349பேர்; கால்நடைகள் 26053; இருந்த இடம் தெரியாமல் போன குடிசைகள் 162412; சேதாரமுற்ற வீடுகள் 35230. இதிலிருந்து நாமே யூகித்துக்கொள்ளவேண்டியதுதான் கணக்கிற்கு வாராதவைபற்றியும், மக்கள் சேதாரம் குறித்தும்.

இவை மட்டுமல்ல, மரங்கள், வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள், கரும்புப் பயிர்கள், வெற்றிலைக் கொடிக்கால்கள், பழத் தோட்டங்கள் முதலியவற்றின் சேதாரமும் பலகோடிக்கு இருக்குமென்று கூறப்படுகிறது.

நாகபட்டினம், தரங்கம்பாடி, பொறையார் முதலிய இடங்களில் புயலின் கடுமை உச்சத்தில் இருந்திருக்கிறது. காற்றுடன் கடல்நீரும் ஊருக்குள், கரையிலிருந்து 5மைல் வரை புகுந்து, புரண்டோடி அழிவு வேலைகளைச் செய்திருக்கின்றன.

ஏற்கனவேயே பஞ்சத்தாலும், பட்டினியாலும்வாடிவதங்கி உழைப்பிற்கேற்றஊதியமின்றி, கால்வயிற்றைக் கழுவிக்கொண்டிருந்த ஏழை மக்களிடம் இயற்கையும் சதிசெய்துவிட்டது.

குந்தி இருந்த குடிசை, மனைவி மக்கள், கால்நடை முதலியவற்றை இழந்து பரிதவித்து நிற்கும் சகோதரர்களுக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், நேயர்களையும் பிறரையும் இவர்களுக்கு தங்களாலியன்ற உதவியைச் செய்ய முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னை கவர்னர் அவர்கள் "ராஜ்ய புயல் கஷ்ட நிவாரணநிதி" என்று ஒன்றை மந்திரி மாணிக்கவேலர் தலைமையில் 15பேர் கொண்ட கமிட்டியுடன் நியமித்துள்ளனர். ஙிதிக்கு அனைவரும் தாராளமாக உதவ வேண்டுகிறோம்.

மாணிக்கவேலர்தலைமை என்றவுடன் பாராமுகமாகஇருந்துவிடாது பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான் என்பதை உணர்ந்து உதவி புரியக்

கோருகிறோம். அல்லது தங்கள் கழகங்கள்—கட்சிகள்மூலம் பொறுப்பான முறையில் பணம் வசூலித்து நேரடியாக உதவி புரிவதையும் வரவேற்கிறோம்.

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் ரூ. 1000மும், இந்திய பிரதமர் நேரு தேசீய நிவாரண நிதியிலிருந்து ரூ. 30000மும் அனுப்பியுள்ளனர். "சிறு துளி பெரு வெள்ளம்" உங்களால் இயன்றதை அனுப்பிவையுங்கள்.

கவர்னர் துவங்கியுள்ள நிதிக்கு செக் அல்லது மணியார்டர் மூலம் பணம் அனுப்பவேண்டிய விலாசம்: **கௌரவபொக்கிஷதார், சென்னை ராஜ்ய புயல் நிவாரண நிதி, இம்பீரியல் பாங்கு, சென்னை. அல்லது சென்னை ராஜ்ய ரெவின்யூ இலாகா உப காரியதரிசி, கோட்டை, சென்னை.**

வடநாட்டில் ஒரு அழிவு என்றால் அள்ளி, அள்ளி இறைத்தோமே உதவி நாடகங்கள், நாட்டியங்கள், இசைக் கச்சேரிகள் மூலம்! இன்று நம்மிடத்திலேயே நேர்ந்துள்ள இக்கொடுமைக்கு சினிமா தியேட்டர் சொந்தக்காரர்கள் ஒருநாள் வருவாயையும், நடிகர்கள், பாடகர்கள் உதவிநாடகங்கள், கச்சேரிகள் மூலமாகவும் உடனடியாக நிதிதிரட்டிக் கொடுக்க முன்வரவேண்டுகிறோம்.

'மகிழ்ச்சி' வழி அறிஞர்கள்!

சென்ற மாத (கார்த்திகை 16—11—52) இதழில் **பயங்கரமான புள்ளி விபரம்** என்ற தலைப்பில், குழந்தை உற்பத்தியைக் குறைத்தாலன்றி, இந்நாட்டின் அபிவிருத்தியை எவ்வித முற்போக்குத் திட்டங்களாலும் சரிக்கட்ட முடியாது என்று நாம் எழுதியிருந்ததை அப்படியே முழுக்க, முழுக்க 24—11—52ல பம்பாயில் நடைபெற்ற "3வது சர்வதேசக் குடும்பக் கட்டுப்பாடு மாநாட்டில்" கலந்து கொண்ட அறிஞர்கள் பூராவும் ஆமோதித்துள்ளனர்.

"அடிக்கடி குழந்தை பெறுவதால் குடும்பத்தின் சந்தோஷமும், அமைதியும் பாதிக்கப்படுகிறது. திருமண சுகத்திற்கும் கேடு உண்டாகிறது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுகமும் நிலவ வேண்டுமானல் குழந்தை பெறுவதை நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும். ஒருபெண்ணை கட்டாயப்படுத்தி அடிக்கடிகுழந்தை பெறச் செய்யும் ஆண், குற்றவாளியே. நம்நாட்டில் இப்போது இருக்கும் ஜனத்தொகைக்கே நம்மால் போதுமான வசதி செய்ய முடியவில்லை. இனியும் அதிகரித்தால் என்ன செய்வது?

இயற்கை விதிக்கு விரோதமாக கர்ப்பத்தடை செய்யலாமா என்று கர்ப்பத்தடைஎதிர்ப்பாளர்கள் கேட்கிறார்கள். கடவுள் மனிதனுக்குப் பகுத்தறிவு கொடுத்திருக்கிறார். பகுத்தறிவுப்படி, சந்தர்ப்பத்திற்குத் தக்கதாக நடந்துகொள்வதே மனிதனின் கடமை. நாகரீகம் என்பது என்ன? இயற்கையை படிப்படியாகக் கட்டுப்படுத்தி அடக்கி ஆண்டு வருவதுதான் நாகரீகம்.

சாவு, நோய், வெள்ளம், பஞ்சம் முதலியனஇயற்கைதான்! அவற்றை

எதிர்த்து கட்டுப்படுத்துவதில்லையா? பகுத்தறிவுகொண்டு பார்த்தால் விஷயம் தானுக விளங்கும்.

காந்திஜியும் காப்பத் தடையை ஆதரித்தார். ஆனல் அவர் ஆண் பெண் உறவைக் கட்டுப்படுத்தச் சொன்னர். இதுமட்டும் இயற்கைக்கு விரோதமில்லையா? நம்மைநாமே கட்டுப்படுத்துவதும் இயற்கைக்கு விரோதம்தானே? காந்திஜி அகிம்சையைப்போதித்தாலும், கோழைத்தனத்தை எதிர்த்தார். நம் வசதிக்குஏற்றபடி நடப்பதுதான் நியாயம்''

மேற்கண்டஇவ்வளவும் மகாநாட்டைத் திறந்துவைத்த இந்திய உதவி ஜனதிபதி கனம் ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசியதாகும்.

"ஜனத்தொகை அபிவிருத்தியை கட்டுப்படுத்துவது மிகமிகமுக்கியம். இல்லாவிடில் நம் சமூக, பொருளாதாரபிரச்னைகளைத் தீர்க்கமுடியாது கர்ப்பத்தடை விஷயத்தில் கவனம் செலுத்தி பரிசிலனைசெய்ய இந்திய சர்க்கார் தெளிவான தீர்மானத்துடன் இருக்கிறது''

இப்படி (முன்பு ஒருசமயம் 'இந்தியாவில் பண்படாதநிலங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை சரியான படி உபயோகத்திற்குக் கொண்டுவந்துவிட்டால், இன்றைய ஜனத்தொகை பெரிதாகத் தோன்ருது. குறைவாகவே இருக்கும்' என்று கூறிய) இந்திய முதன் மந்திரி கனம் நேரு அவர்கள் ஷை மகாநாட்டிற்கு வாழ்த்து அனுப்பியுள்ளார்.

மகாநாட்டில் அமெரிக்கா, ஜப்பான், பாகிஸ்தான், கனடா, ஸ்வீடன், இத்தாலி உள்பட 14 நாடுகளின் 400க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

கலைஞர்களுக்கு 'மகிழ்ச்சி'யின் வரவேற்பு!

நேயர்தபாலில், பெங்களூர் திரு. ஏ. எஸ். ஜேம்ஸ் அவர்கள் எழுதியுள்ளதை வரவேற்கிருேம். சினிமாவில், நாடகங்களில் நடிக்கவிரும்பும் கலை ஆர்வம் கொண்ட ஆண் பெண் அன்பர்கள், பெயர், விலாசம், ஊர், வயது, திறமை முதலியகுறிப்புகளுடன் **புகைப்படம் ஒன்றையும்** (குவார்டர் சைஸ் மவுண்ட் இல்லாமல்) அனுப்பிவைத்தால் நாங்கள் பிரசுரிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுகிருேம். **பிளாக்குகள் தயாரிக்கும் செலவு வகைகளுக்காக ரூபாய் ஐந்து அனுப்பி வைப்பவர்களுக்குமட்டும்தான் இந்தச் சலுகை.**

அமெச்சூர் புகைப்படம் எடுப்பாளர்களுக்கு!

மகிழ்ச்சியில் மாதந்தோறும் கவர்ச்சிமிக்க புகைப்படங்களை பிளாக்குகள் செய்து வெளியிட முடிவு செய்துள்ளோம். முதல் தேர்வு பெறும் படத்திற்கு ரூபாய் ஒன்று பரிசு கொடுக்கப்படும்.

ஓவியக் கலைஞர்களுக்கு!

அந்தந்த மாதங்களில் நிகழும் அரசியல் கருத்துக்களையொட்டி கேலிச் சித்திரங்கள்—கார்டூன்கள்—இந்தியன் இங்கில் வரைந்து அனுப்பி வைத்தால், பிரசுரத்திற்கு ஏற்றதற்கு ரூபாய் ஒன்று பரிசளிக்கப்படும்.

அட்டைப்படம்:
பராசக்தி புகழ் பண்டரிபாய்

திராவிட மாணவர்களுக்கு அண்ணாவின் அறிவுரை

அரசியல் போராட்டங்களில் மாணவர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்ற நோக்கம் கொண்டவனே நான். அதற்காக அரசியலைத் தெரிந்து வைத்துக்கொள்ளக்கூடாது என்பதல்ல. ஆர்வமெல்லாம் படிப்பில்தான் இருக்க வேண்டும். நான் ஒரு கலாசாலையிலோ, கல்லூரியிலோ புகுந்து "இங்கு யார் முதல் மார்க்கு வாங்குபவர்" என்று கேட்டால், 'திராவிட மாணவன்' என்று பதில் கிடைக்கவேண்டும். ஆரிய மாணவர்கள் பொறாமைப்படுமளவுக்கு நீங்கள் உங்கள் பள்ளி வாழ்க்கையை உயர்த்தி அதிக மார்க்குகள் வாங்க வேண்டும். இதுதான் எனது பள்ளித் தம்பிகள் அண்ணாவிற்குத் தேடித் தரும் உயர்நிலை.

ஓய்வு காலங்களில் கிராமங்களுக்குச்சென்று நமது பண்பாட்டையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். உங்கள் ஊரில் ஒரு இடத்தில் கந்த புராணம் கதா காலக்ஷேபம் நடந்தால் மற்றோர் இடத்தில் கார்ல்மார்க்ஸின் வரலாற்றை கதாபிரசங்கம் செய்யுங்கள். ஆழ்வார்கள் மகிமை கூறப்பட்டால், நீங்கள் ஆப்ரகாம் லிங்கனின் அற்புத சாதனைகளை எடுத்தோதுங்கள். இந்தத் தொண்டுகள் செய்து வந்தாலே போதும். சில சந்தர்ப்பங்களில் உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படும்போது அழைக்கிறோம், அப்பொழுது வந்தால் போதும். அதுவரை உங்கள் கவனம் முழுவதும் கல்வியில் இருக்கட்டும்.

★

சினிமாச் செய்திகள்

பானுமதியின் "சண்டிராணி"

அகில இந்தியப் புகழ்பெற்ற நடிகை திருமதி P. பானுமதி தான் புதிதாக சென்னையில் நிர்மாணம் செய்திருக்கும் "பரணி ஸ்டூடியோவில்" தனது சொந்த டைரக்ஷனில் "சண்டி ராணி"யைத் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளிலும் வெகு துரிதமாக தயாரித்து வருகிறாராம். படம் இதுவரை மூன்றில் இரண்டு பங்கு முடிந்துவிட்டதாம். சமீபத்தில்கூட இயற்கை வனப்பு மிகுந்த கொடைக்கானல் மலையில் பல அழகான வெளிக் காட்சிகள் படம் பிடிக்கப்பட்டனவாம்.

இப்படத்தில் பிரபல நடிகர்களான பானுமதி, N. T. ராமராவ், S. V. ரங்காராவ், ஆஷா, ரேலங்கி முதலியோர் நடிக்கின்றனர். உயர்தர டெக்னீஷியன்களான சேகர் ஆர்ட்டையும், செல்வராஜ் கேமிராவையும், கோடீஸ்வரராவ் ஒலியையும் மேற்கொண்டு, பானுமதியின் முயற்சி பிரமாத வெற்றியடைய தங்கள் முழுத்திறமையையும் செலுத்தி கவனித்து வருகிறார்களாம்.

படத்தின் வசனத்தை பண்டிட் சுதர்சன் ஹிந்தியிலும், சாமுத்ரலா தெலுங்கிலும், உதயகுமார் தமிழிலும் முழு கவனத்துடன் எழுதியுள்ளார்களாம்.

பிரசித்தி பெற்ற ஹிந்தி பின்னணி பாடகர் தாலத்மகமதும், தமிழ், தெலுங்கில் கண்டசாலாவும் பாடிய பாடல்கள் சமீபத்தில் ரிக்கார்டு செய்யப்பட்டனவாம்.

இப்படத்திற்கான பாடல்களை விஸ்மாமித்திரா அடில், சாமுத்ரலா, சந்தானம் ஆகியோர் முறையே ஹிந்தி, தெலுங்கு, தமிழ் பாஷைகளில் இயற்றியுள்ளார்களாம்.

போட்ட திட்டப்படி 1953 மார்ச்சில் பானுமதி இப்படத்தை முடித்து, "தி ஆல் இந்தியா பிலிம் கார்பரேஷன் லிமிடெட், நியூ டெல்லி" மூலம் வெளியிட முடிவு செய்துள்ளார் என்று சென்னை பரணி புரடியூசர்ஸ் மூலம் அறிகிறோம்.

கட்டுரைப் போட்டி 3 **பரிசு ரூ. 2—0—0**

வனிதையர் வாழ்க்கையில் வழுக்கி விழுவதேன்?

மகிழ்ச்சி 2 பக்கங்களுக்குள் முடியக்கூடியதாக எழுதி 25—12—52க்குள் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். நீண்ட கட்டுரைகள் கவனிக்கப்படமாட்டாது கவரின்மீது கட்டுரைப் போட்டி 3, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர் என்று குறிப்பிடவும்

பொங்கல் மலர்

இவ்வாண்டு மகிழ்ச்சி தைப் பொங்கல் மலர் கிடையாது ஆனுல் சில விசேஷ அம்சங்களுடன் அணு 4 விலையிலேயேவழக்கம்போல்தை 1உ வெளிவரும்.

—ஆசிரியர்

அருப்புக்கோட்டை

ஆறுமுகம் களிம்பு

எந்த ரணமாயிருந்தாலும் இதைத் துணியில் தடவி உபயோகித்தால் சீழ் ஜலத்தை வெளியேற்றி ஆற்றும்

அ. ராம மு. ஆறுமுக பாண்டியனுல் தயாரிக்கது

அழகு நூல் இல்லம்

10, பாட்டர்ஸ் தெரு, கெல்லீஸ் சென்னை-10.

1953 வருஷ காலண்டர்கள்

* அழகிய ஆர்ட்காகிதத்தில் கண்கவர் வர்ணங்களில் அச்சடித்தது

* அறிஞர் அண்ணு, நெடுஞ்செழியன், அன்பழகன், கருணுநிதி, சிற்றரசு, மதியழகன், ஈ. வி. கே. சம்பத், கே. ஆர். இராமசாமி, பாரதிதாசன், ஆசைத்தம்பி, சௌந்தரபாண்டியன் மற்றும் பல தலைவர்களின் அழகிய படங்கள் நிறைந்தது.

* தி. மு. க. புத்தக வெளியீடு நிலையங்கள், பத்திரிகைநிலையங்கள், மாவட்ட கழகங்கள், முக்கியஸ்தர்களின் விலாசத்துடன்.

குறிப்பு:— மாதத்திற்கோர் படம் வீதம் 12 படங்கள் அடங்கியது.

(1) ஒரு காலண்டர் விலை அணு 0—8—0. (2) வணிகர் கழிவு ஒரு காலண்டருக்கு 25%வீதம் தரப்படும். (3) குறைந்தது 6 காலண்டர்களுக்காவது ஆர்டர்செய்ய வேண்டும். (4) தேவையான காலண்டர்களுக்கு கழிவு நீக்கி முன்னதாக பணம் அனுப்ப வேண்டும். அல்லது தேவையைக் குறிப்பிட்டால் வி. பி. மூலம் அனுப்பப்படும். (5) மாதிரி காலண்டர் வேண்டுவோர் 0—9—6 அணு தபால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

[பழைய கதை: ராமனும் ஜானகியும் காதலிக்கின்றனர். ராமன் காதல் கடிதம் கொடுக்கிருன். அப்புறம் படிக்கலாம் என்று கடிதத்தை பானை இடுக்கில் மறைத்துவைக்கிருள் ஜானகி கடிதத்தை எடுக்க கைவிடும் போது தேள் கொட்டுகிறது; கடிதம்காணப்படவில்லை.பின்...]

ராமன்:

இமயமலை உச்சியும், பெண்களின் உள்ளமும் ஒரேமாதிரியானவை என்று நினைக்கிறேன்.

இமயமலை உச்சியைக் கண்டு பிடிப்பது கஷ்டமாக இருப்பதைப்போலதான் பெண்களின் இதயத்தைக் கண்டுபிடிப்பதும் மிகமிக கஷ்டமாக இருக்கிறது.

ஜானகி என்னை விரும்புகிருளா, இல்லையா? இதை நான் எந்த அளவுகோல் கொண்டு நிர்ணயிப்பது? கருத்தறிய கண்ணோடு கண் நோக்கிவிட்டால் போதும் என்கிருர், வையக வாழ்வுக்கே வழிகாட்டியாகஉள்ள வள்ளுவர்.

என் ஜானகியும் என்னைப் பார்க்கத்தான்செய்கிருள். இதை ஆதாரமாக வைத்துதான் காதல் கடிதம் கொடுத்தேன். அவள் ஏன் எனக்கு பதில்எழுதவில்லை? விருப்பமிருந்தால் எழுதியிருக்க வேண்டாமா?

கண்ணோடு கண் நோக்கிவிட்டால் கருத்தறிந்துவிட்டதாகக் கருதுவது தவறு என்றுதான் நினைக்கிறேன். கண்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கலாம்; ஆனால் கண்களுக்குநடிக்கவும்தெரியுமே!

இந்த நிலையில்—கண்ணோடு கண் நோக்கிவிட்டதால் வாய்ச் சொல்பயனில்லை என்றுநினைத்து கைச் செயலை காட்ட ஆரம்பித்தால்...கன்னத்திலே அறை கிடைக்காதுஎன்பது என்ன நிச்சயம்? பெற்றோரிடமோ உற்றோரிடமோ சொல்லி சீரழிவுவராது என்பது என்ன நிச்சயம்?

இப்படிப்பட்ட இழிவு எதுவும எனக்கு வருமா? ஜானகிதான் கடிதம் கொடுத்ததைச் சொல்லிவிடுவாளா? இஷ்டமில்லாதவளாயிருந்தால் என்னிடத்திலே ஏன் கடிதம் வாங்கவேண்டும்? ஆசையாக, அதிலும் நாணமாக அவள் என்னை ஏன் பார்க்கவேண்டும்? வெறுப்புள்ளவள் திரும்பித் திரும்பிப் பார்ப்பாளா? சிரிப்பாளா? என் ஜானகி எந்தஇடத்தில் என்னைக் கண்டாலும் பார்க்கிறாள்; சிரிக்கிறாள். பின் ஏன் பதில் எழுதவில்லை?

ஒருவேளை—ஜானகிக்கு பதில் எழுதத் தெரியவில்லையா? ஒருக்காலும்அப்படியிருக்காது. அடிக்கடி அவள் பாட்டிக்கு நல்லதங்காள்கதையும், விக்கிரமாதித்தன் கதையும் ராகம்போட்டு ஜானகி படிப்பது, ரேடியோவில் ‘காலச்சேபம்’ கேட்பதுபோல் இருக்குமே! இந்த ஞானம் உள்ளவளுக்குகடிதம்எழுதத்தெரியாதா?

என் மனம் இப்படி தினமும் குழம்பியது. ஜானகியும் முன்போல் வெளியே வருவதில்லை. உடல் நலம் இல்லாமல்தான் அவ்விதம் செய்கிறாள் என்று நானே ஆறுதலடைந்துகொண்டேன். ஆனால் இடையிடையே எப்போதாவது அவள் வெளியே வந்தால் மிரட்சியோடு என்னைப் பார்த்தாள்.

இது எனக்கும்பயமாகத்தான் இருந்தது. அவள் பாட்டிக்கு விஷயம் தெரிந்திருக்குமோ? அதனால்தான் பயப்படுகிறாளோ? என் மாமாவிடம் அவள் பாட்டி சொல்லிவிட்டால்...? இவைகளை நினைக்க எனக்கு திகிலாகத்தான் இருந்தது.

ஆனால்—கொஞ்சம் துணிவு எனக்கு ஏற்பட்டது. அன்று ஜானகி அவள் வீட்டு பின்புறம் நின்றுகொண்டிருந்தாள். என் கடிதத்திற்கு ஏன் பதில் எழுதவில்லைஎன்று கையால் ‘சைகை’ காட்டிக் கேட்டேன்; மிரள மிரள விழித்துக்கொண்டே, தலையை அசைத்து, கையைக் காட்டினாள் ஜானகி.

அவள் என்ன சொல்கிறாள்? எழுத இஷ்டமில்லைஎன்கிறாளா? முடியவில்லை என்கிறாளா? ஒருவேளை—எழுதுவதற்கு பேப்பரும் பென்சிலும் ஏழைக் குடிசையில் இருக்காதோ? அதனால்தான் அவள்எழுதவில்லையோ? அதைத்தான் சொல்லுகிறாளோ? எனக்கு ஒன்றுமேபுரியவில்லை. என்ன செய்வதென்றும் தெரியவில்லை.

இப்படியே நாட்கள் போய்க் கொண்டிருந்தன. அன்று என்

மாமா வியாபார நிமித்தம் நான் கொழும்புக்குப் போகவேண்டும் என்று சொன்னார். மாமாசொல்லை மறுக்கும் தைரியம் எனக்கு இல்லை. மாமா அவர்கள் கொழும்பிலே போய் என்னை குடியிருக்கச் சொல்லவில்லை. பாக்குக் கொள்முதலுக்காக ஒரு ஆறு மாதகாலம் தங்கியிருந்து வரச் சொன்னார்.

ஆறுமாசம் என்ன, ஜானகி மட்டும் கூட இருந்தால் ஆயுசு பூராவும்கொழும்பிலேகூட அல்ல குட்டிச்சுவர் போன்ற குடிசையிலேகூட இருந்து வாழ்ந்துவிடுவேன். ஜானகியைப் பிரிந்து ஆறுமாசம் என்றால்... அப்பப்பா ...ஆயுட் கைதியாக மனைவி மக்களைப் பிரிந்து அந்தமானுக்குச் செல்லும் கைதியைப்போல நானும் கலங்கினேன்.

அன்று இரவு 8 மணி இருக்கும். ஜானகி தன் குடிசையின் பின்புறத்திலே நின்றுகொண்டிருந்தாள். அன்று பௌர்ணமி இல்லாவிட்டாலும், பகல்போல நிலவுஒளிவீசிக்கொண்டிருந்தது. தோட்டத்தில் நின்ற என்னைப் பார்த்து ஏதோ கையசைத்தாள் ஜானகி. இதயம் அறிய இதை விட வேறு என்ன வேண்டும்? இதைத்தானே இத்தனை நாளாக எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்தேன்.

இந்த சமயம் ஜானகியை சந்திக்காவிட்டால் வேறு சமயம் நிச்சயம் கிடைக்காது. இந்த எண்ணத்தில் எனக்குதுணிச்சல் ஏற்பட்டது. ஜானகி இருக்கும் இடத்திற்குச் செல்ல இடையே ஒரு முள் வேலி இருந்தது.

முள்வேலிமட்டுமல்ல, ஆணும் பெண்ணும் தனித்துப் பேசக் கூடாது என்ற சமூகக் கட்டுப்பாடு என்ற சர்ப்பமும் முள் வேலியில் நெளிந்துகொண்டு, படம் எடுத்தது. என்னைப் பயப்படுத்தியது; ஆனால் உண்மைக் காதல் என் உள்ளத்தில் தைரியத்தைஊட்டியது. ஜானகி நாளை என் மனைவிதான் என்ற மனோதைரியம் பிறந்தது.

மனைவி ஜானகியைக் காண அன்று அயோத்தி ராமன் ஆழ் கடலையே கடந்தான். இந்த முள்வேலிஎம்மாத்திரம்? அரண்மனையின் அந்தப்புரத்திலேகூட நுழையும் தெம்பு காதலுக்கு உண்டு. முள்வேலியைத் தாண்டினேன். ஆனால்...

வேலியைத் தாண்டும்போது என்னைப்பார்த்து ஜானகி பதறினாள்; அக்கம்பக்கம் பார்த்தாள்; அவள் கைகளும் தலையும் "வர வேண்டாம்" என்று சொல்வது போல் ஆடின. அதே சமயத்தில் ஜானகிக்கு ஆதரவாக "நில்! போகாதே!" என்று உத்திரவிடுவதைப்போல நறுக்கென்றுமுள் தைத்தது முள் தைத்ததால் கால்கள்தான் நின்றனவே தவிர, உள்ளம் நிற்கவில்லை முள்ளைப் பிய்த்தெறிந்துவிட்டு ஜானகியிடம் சென்றேன்.

"போய்விடுங்கள்! யாராவது பார்த்துவிட்டால்......" என்று பயந்தபடி கூறினாள் ஜானகி.

"பயப்படாதே! உன் பாட்டி இல்லையா?" என்று கேட்டேன் நான்.

"வெளியே போயிருக்கிறாள், வந்துவிடுவாள். நான் போகிறேன்" என்று புறப்பட கால் எடுத்துவைத்தாள் ஜானகி.

"நில் ஜானகி! உன்னிடம் ஒருவிஷயம்பேசவேண்டும். என் கடிதத்திற்கு நீ ஏன் பதில்எழுதவில்லை?" என்று கேட்டேன்.

"ம்!...கடிதம் காணாமல்போய் விட்டது" என்று தயங்கியபடி சொன்னாள் ஜானகி.

"காணாமல் போய்விட்டதா? வேறுயார் கையிலும் சிக்கியிருக்குமா?" என்று பயத்தோடு கேட்டேன்.

"ஆமாம்! கடிதத்தை அது எடுத்துப் போய்விட்டது" என்றாள் ஜானகி.

எனக்கு ஓரே திகிலாயிருந்தது. "யார்எடுத்தது?" என்று மீண்டும் கேட்டேன்.

"எலிஎடுத்துக்கொண்டுபோய் இப்படி கடித்துப் போட்டிருக்கிறது" என்று கந்தல் கந்தலாக உள்ள நான் எழுதிய கடிதத்தை காட்டினாள் ஜானகி.

"இதை நீ படித்துப் பார்த்தாயா?" என்று அவளைக் கேட்டேன்.

"ஆயிரம் ஓட்டைகள் உள்ள கடிதத்தை எப்படி படிப்பது?" என்று ஜானகி கேட்டதானது ஆயிரம் ஊழல்கள் உள்ள பணக்காரனை எப்படி மணப்பது என்று கேட்டதுபோல் தோன்றியது எனக்கு.

உள்ளபடியே, எலிகள்கூட ஏழைகளுக்கு எதிரிகளாகஇருக்கின்றன. இதனால்தான் ஜானகி பதில் எழுதவில்லை என்பதை உணர்ந்தேன். "இந்தக் கடிதம் உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டேன்.

"எலிப் பொந்தில் நீட்டிக் கொண்டிருந்தது. எடுத்துப் பார்த்தால் இந்த நிலையில்...!" என்று நீட்டினாள் ஜானகி.

"ஜானகி! நீ என்னை விரும்புகிறாயா?" என்று கேட்டேன்.

வாய் திறக்காமல் மௌனமாக தலைகுனிந்து நின்றாள். "வாய்ச் சொல் பயனில்லை" என்றவள்ளுவர் வாக்கு நினைவுக்குவந்தது

'ஜானகி' என்று கனிவாகச் சொல்லி அவள் கையைப் பிடித்தேன். கையை இழுக்கவும் கொடுக்கவும் மனமின்றி இதயம் பறிகொடுத்து நின்றாள். என் கைவிரல் மோதிரத்தைக் கழற்றி அவள் விரலிலே மாட்டினேன்.

"இதெல்லாம் வேண்டாம்" என்றாள் கொஞ்சலாக ஜானகி.

"நாளை கழுத்திலே தாலிகட்டும்போதும் இப்படிதான் சொல்வாயா?" என்று அவள் கன்னத்தைக் கிள்ளிக் கேட்டேன்.

"ம்! சும்மா இருங்கள். யாராவது பார்த்தால்...என்ன நினைப்பார்கள்?" என்று கேட்டாள்.

"என்னநினைப்பார்கள்? வருங்கால வாழ்வுக்கு இப்போதே ஒத்திகை நடத்துவதாக நினைப்பார்கள்!" என்று சொன்னேன்.

முடிவாக......

"ஜானகி! இன்னும் இரண்டு தினத்தில் கொழும்புக்கு போகிறேன் வந்ததும் நம் திருமணம்? என்ன?"

ஜானகி ஒன்றும் பேசாமல் நின்றாள்.

"என்ன ஜானகி? இப்படியா மௌனமாக இருப்பது? நான் கொழும்புக்குபோகிறேன்என்று சொன்னதும் "கொழும்புக்கா? அதற்குள் பிரியப்போகிறீர்களா? எப்போது வருவீர்கள்?" என்றெல்லாம் நீ கேட்க வேண்டாமா?" என்று கேட்டேன்.

வெட்கத்தாலும், வேதனையாலும் பேசாமலே நின்றாள். ஒரே நாள் பழக்கத்தில் எல்லாம் பேச முடியுமா? படித்த பெண்கள் வேண்டுமானால் நன்கு பேசுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு நடிக்கத்தெரியும். ஜானகி கள்ளமில்லாத உள்ளங் கொண்டவள். கலங்குகின்றாள்.

"ஜானகி! நீஎதற்கும் கவலைப்படாதே! ஆறு மாதத்திற்குள் வந்துவிடுவேன். வரும்போது உனக்கு நல்லசேலையும் துணியும் வாங்கிவருவேன். வந்தவுடனே கல்யாணம். தெரியுதா? எங்கே சிரி பார்க்கலாம்" என்று சொன்னேன்.

கண்களிலேநீர்கலங்க, ஜானகி சிரித்தாள். என் கைக்குட்டையால் அவள் கண்களை துடைத்தேன்.

"கவலைப்படாதே ஜானகி! நம் காதலின் அடையாளமாக உன் விரலிலே கணையாழி இருக்கட்டும்" என்று சொல்லி பிரியமுடியாமல் இருவரும் பிரிந்தோம்.

மறுநாள் காலை மலர்ந்தமுகத்தோடு ஜானகி எனக்குதரிசனம் கொடுத்தாள். என் கண் முன்னாலேயே கை மோதிரத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தாள்.

அடுத்தநாள் நான் இலங்கைத் தீவுக்குபயணமாகிக்கொண்டிருந்தேன். பெட்டி படுக்கை எல்லாம் தயார் செய்யப்பட்டன. சாமான்கள் காரில் வைக்கப்பட்டன. என் மாமாவிடம் விடைபெற்று காரில் ஏறச்சென்றேன்.

ஜானகி வீட்டுக்கு வெளியே நின்று என்னையே ஆவலாகப் பார்த்தாள். நானும் துன்பத்தோடு பார்த்தேன். ஜானகி வீட்டு வழியே கார் வந்தது. ஜானகி முகத்தில் கண்ணீர் வழியக் கண்டேன். ஜானகியின் உருவத்தை நான் பார்க்க முடியாதபடி கண்களிலேநீர்நிறைந்து மறைத்தது. காரும் கடந்துவிட்டது ஜானகி அழுதபடி நின்ற காட்சி என் மனக்கண் முன் மறையாமல் என்கூட வந்தது.

(தொடரும்)

2வது போட்டி பரிசுக் கட்டுரை

எது அழகு?

அ. கிருஷ்ணன், கோயமுத்தூர்.

பாம்பும் புலியும் பார்வைக்கு அழகுதான். ஆனால்மனிதவாழ்க்கைக்கு நெருங்கிய தொடர்போ பயனோ கிடையாது. தாமரை அழகுதான். சூடுவார் இல்லை. துள்ளி விளையாடும் புள்ளிமான் கூட அழகுதான். வாழ்க்கைக்குப் பயன்பெறுவதில்லை. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இதுதான் அழகு என்று திட்டவட்டமாக வரையறுத்துச் சென்றிருக்கிறார்கள் புலவர்கள். எல்லாவற்றையும் கவனிக்க இயலாவிட்டாலும் வாழ்க்கையில் இன்றியமையாத துறைகளில் 'எது அழகு?' என்பதைக் கவனிப்போம்.

"அதோ! வானளாவிக் காட்சி அளிக்கிறதே நான்கடுக்கு மாடி வீடு அதுஎன்னுடையது. வந்து கொண்டிருக்கும் அழகியமங்கை என்னுடைய மனைவி. அவள் உடுத்தியிருக்கும் காஷ்மீர் பட்டு ஐந்நூறு ரூபாய் விலையுள்ளது. பூண்டிருக்கும் நகை பத்தாயிர ரூபாய் மதிப்புள்ளது. நாங்கள் போய்க்கொண்டு இருக்கும் கார் இருபதாயிரம் ரூபாய்கள் தந்து வாங்கியது......" இது செல்வந்தர் மற்றவர்களிடையே பேசும் அழகு! ஆடம்பர வாழ்க்கை தான் ஆனந்தம் தரும் என்று எண்ணுகின்றனர் மாளிகைவாசிகள். ஆனால் இது அவர்களுக்கு அழகல்ல. பின் எது அழகு? இதோ கூறுகிறார் அதிவீரராம பாண்டியர் என்னும் பெரும் புலவர். "செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" வசதி படைத்தோர்க்கு உறவினர்களைக் காப்பாற்றுதலே அழகாகும்.

அடுத்து அதே புலவர் சுக போகங்களில் மூழ்கி அந்தப் புரத்து நாரீமணிகளின் பாதந் தாங்கியாக ஆட்சி பீடத்தார் இருப்பதை உணர்ந்து அரசு ஓச்சுபவருக்கு எச்சரிக்கை செய்கிறார், "மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை—மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்" நீதி வழுவாமல் மக்களின் குறைகளை அகற்றி அரசு புரிவதே ஆட்சி பீடத்திற்கு அழகு தரும்.

"யாம் அனைத்தும் அறிவோம். யாம் அறியாதது வையகத்திலும் உளதோ? எம்மை யாரும்யாதும்

கேளாதீர்! யாமும் யாருக்கும் யாதும் கூறேம்!'' என எல்லாம் கற்றுணர்ந்துவிட்டதாக எண்ணி இறுமாப்பிலே சொக்கியிருக்கும் பண்டிதபெருமான்களுக்கு மீண்டும் அதே புலவர் கூறுகிறார், ''கல்விக்கு அழகு கசடற மொழிதல்'' என்று. தான் கற்றவற்றைப் பிறருக்குப் பிழையற எடுத்துக் கூறலே அறிஞர்க்கு அழகுதரும் என்று உரைக்கிறார்.

அடுத்து உலகில்வாழும் ஆண் பெண்ணிற்கு எது அழகு என்று பார்ப்போம். அழகுக்காக நாம் எவ்வளவு பாடுபடுகிறோம். 'புஸ் கோட்', 'புல்பேண்ட்', சரிகைப் பட்டு, 'ஜம்பர்' இன்னும் என்னென்னமோ அணிகிறோம். போதாததற்கு சுருள் சுருளாகத் தலைமயிரை சீவிமுடித்துக்கொள்கிறோம். வாசனைத்திரவியங்கள் அனைத்தும் உடலில் ஊற்றிக் கொண்டு கண்ணாடிமுன் நின்று ஒருமுறை பார்த்துக்கொள்கிறோம். ஆனால் இவையெல்லாம் அழகல்ல. வீண் ஆடம்பரம். யாருக்கும் பயனில்லை. பின் எது அழகு? இதோ கூறுகிறார் நாலடியார்:

''குஞ்சி யழகும்
கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும்
அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும்
நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு''

கருத்துக்கு வாருங்கள். நமக்கே வெட்கமாக இருக்கும், இது நாள்வரையிலும் அழகுக்காக நாம் செய்த 'லீலை'களை எண்ணும்போது. ''தலை மயிரைச் சீவி முடிந்துகொள்வதாலும், சரிகைக்கரையோடுகூடிய ஆடைகளை அணிந்துகொள்வதாலும், வாசனைப் பொருள்களைப் பூசிக் கொள்வதாலும் உண்டாகின்ற அழகுகள் அழகாகமாட்டா. நாம் நல்லகுணமுடையவர்களாக இருக்கிறோம் என்ற நடுநிலைமையைத்தருகின்ற கல்வியால் உண்டாகும் அழகே அழகாகும்.'' பட்டாடை அழகுதராது. நகை அழகு தராது. வாழ்க்கையில் கல்விஒன்றே அழகுதரும். மனித வாழ்வில் ஒப்பற்ற 'அழகு எது?' என்பதை எடுத்துக் காட்ட இன்னுமொரு பாடலைத் தருகிறேன். பின்பு நீங்களே ஓர் முடிவிற்கு வாருங்கள் 'எது அழகு?' என்று. இதோ பாடல்:

''மயிர்வனப்பும் கண்கவரும்
மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின்
வனப்புஞ்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும்
வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு''
—சிறுபஞ்சமூலம்

எனவே, கல்வியழகுதான் மானிடருக்கு ஒப்பற்ற தேவையான அழகு. ★

[உகிர் = நகம்]

அறிவுப்பூங்கா

[மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்]

நான்......?

ஆசிரியர்: 'இளம்சிற்பி'
பாசுமணி பதிப்பகம், பொள்ளாச்சி.
பக்கங்கள் 63—விலை ரூ. 1

இது பத்து சீர்திருத்தக் கதைகளின் தொகுப்பு. கதைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு புதுமை காண்கிறது. குறிப்பாக இக்கதைகளில் பெண்களின்—விதவைகளின் அவலநிலை பிழிந்து காட்டப்படுகின்றன. அவர்கள் துயர் துடைக்க இளைஞர்கள் முன்வரவேண்டுமென அழைக்கப்படுகிறார்கள். சுவைமிக்க பாலில் ஒரு துளி விஷம் என்றார் போல் "கனகம் காதகியா?" என்ற கதையில் 'படுக்கை அறை' வர்ணனை புகுந்துள்ளது. இதுதேவையற்றது. உயர்ந்தபண்பை ஒரு 10வரி புகுந்து பாழ்படுத்தியுள்ளது. அடுத்துவரும் பதிப்புகளில்இதைநீக்கிக்கொள்வது நலம்.

* * * *

மாயவீடு 0—1—0
குதிரைவீரன் 0—1—0

சிறுவர் கதைப் புத்தகங்கள்
ஆசிரியர்: "நிறைமதி"
(நா. பூ. சந்திரன்)
சிறுவர் பதிப்பகம்
202, தம்புசெட்டிதெரு, சென்னை-1

அன்பும் அறிவும்

வித்துவான் இரா. இளங்குமரன்,
தமிழாசிரியன், பு. மூ. மா.
உயர்நிலைப்பள்ளி, தளவாய்புரம்.
பக்கங்கள் 10 :: விலை அணா 2

அன்பும் அறிவும் ஆவன செய்யும் ஆசைஒழிந்தால் அடையா துன்பம் —இப்படி தமிழ் எழுத்துக்களை வரிசையாக வைத்து வை முடிய ஒரு வரி, இரண்டுவரி போதனைகளை ஔவைப்பாட்டி போன்று தொகுத்துள்ளார். 6 பக்கம் உள்ளதற்கு 4 பக்கம் பதவுரை கூறவேண்டிய நிலை இல்லாது சாதாரண வார்த்தைகளையே புகுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

* * * *

மாமாவின்காதலி

விருதை ந. இராமசாமி
ரதி பப்ளிகேஷன்ஸ், திருவையாறு
பக்கங்கள் 24—விலை 6 அணா.

சென்னைநகரில் கல்லூரியில்படிப்பதாகக் கூறிக்கொண்டு, கண்டபடி திரியும் கபோதிகளையும், கடற்கரை கதாநாயகர்களையும், அவர்கள் வலையில் விழும் அணங்குகளையும் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். கதையின் போக்கும் நடையும் நன்றாக இருக்கிறது.

புதுமாப்பிள்ளை!

[மகிழ்ச்சி சதானந்தம்]

நடுநிசி. பகலெல்லாம் "கட கடா, குடுகுடு"வென டிராம், கார் போக்கு வரத்துக்களாலும், ஜனசமுத்திரத்தின்பேரிரைச்சல் களாலும் சித்திரவதைக்குள்ளாகி குழம்பிக் கிடந்த சென்னைநகர், அந்த நள்ளிரவில் சற்று அமைதி யுடன், கார்பரேஷன் மின்விளக் குகளின்ஒளியில்காட்சியளித்தது

'சற்று அமைதியுடன்' என் றால், அவ்வேளையிலும்அமைதிக் குப் பங்கம் விளைவிப்பவர்கள் இருக்கிறார்களா என்றால், சந் தேகமின்றி இருக்கத்தான் செய் கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் யார்? திருடர்கள். திருடர்கள் என்றால் ஏழ்மை நிலையால் தன் வாழ்க்கைச்சக்கரம் சுழல, பிறர் பொருளை அபகரிப்பவன் மட்டு மல்ல, சொந்த மனைவி சொர்ண விக்கிரகம்போன்று வீட்டிலிருக் க, பிற பெண்களை இச்சித்து, உல்லாசபுரிக்குச் செல்கிறோம் என்று நினைத்து, உதிரத்தை உறிஞ்சும் சல்லாப சிங்காரிக ளைச் சந்திக்கச் செல்லும் உலுத் தர்களும் திருடர்கள்தான்.

இவர்களை குறிப்பிட்ட இடங் களுக்கு அழைத்துச்செல்ல அட் ரஸுடன் காத்துநிற்கும் வாட கைக் கார்க்காரர்கள், ரிக்ஷா வாலாக்கள் முதலியோரின் நட மாட்டம் இரவின் அமைதியைக் குலைக்கிறது. பகலில் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு பட்டாலும், பாதி வயிற்றிற்குக் கூட சம்பாதிக்க முடியாத உண் மைஉழைப்பாளிகளைவிட, இந்த இரவு ஊழியர்கள்(?) நல்ல சான் ஸுடன் இரவைப் பகலாக்கிக் கொள்ளுகிறார்கள்.

ஆந்தை, பூனை, காட்டு விலங் குகள் முதலியவற்றிற்கு இரவில் தான் கண் நன்றாகத் தெரியும். ஆகாரங்களைத்தேட அவற்றிற்கு இரவுதான் தகுந்தநேரம். அப் படிப்பட்ட இரவு ஜந்துக்கள், பிராணிகளுக்காக உள்ள இரவு நேரத்தை மனிதன் துஷ்பிரயோ கம்செய்வதால்தான் நகரங்களில், ஊர்களில் இரவு, அமைதியை இழக்கிறது.

"குத்துப்பட்டவன் சும்மா இருந்தாலும், குறைவயிற்றுக்கா ரன் சும்மா இருக்கமாட்டான்" என்றுகூறுவதுண்டு. ஆகாரமே இன்றி, வீதிகளின் ஓரஞ்சாரங் களில் ஒதுங்கி முடங்கிக் கிடப் பவர்கள், நிம்மதியாகத் தூங்க முடியுமா? அந்நேரங்களில்

அவர்கள் பேச்சுக்களையும் முணு முணுத்தலையும் ஆகாரமாகக் கொள்ளுகிறார்கள்.

இரவு இரயில்களுக்குப் போகும் பிரயாணிகளாலும், இரண்டாவது ஆட்டம் சினிமாப் பார்த்துவிட்டுவருவோர்களின் இரைச்சல்களாலும் நகர் சற்று அமைதியை இழக்கத்தான்செய்கிறது.

2

தெரு விளக்குகள்தான் எறிகிறது என்று இல்லை. சில வீடுகள், பங்களாக்களின் அறைகளிலும் விளக்குகள் எறிகிறது என்பதை ஜன்னல்கள் காட்டிக் கொடுத்துவிடுகின்றன.

அதோ அங்கோர் ஜன்னல் வழியாக வெளிச்சம்தெரிகிறதே! வாருங்கள், சற்று அது என்ன என்று கவனிப்போம்! இவ்வளவு நேரமும் மேலேநாம் கூறிக் கொண்டிருந்தோமே, பலதரப்பட்ட இரவு கதாநாயகர்கள், அவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களின் இடம் இது என்பது நாம் கட்டிடத்தை நெருங்கியவுடன்தான்தெரிகிறது

அந்தக் கட்டிடம், ஒரேமாதிரியான நூற்றுக்கணக்கான அறைகளைக் கொண்ட கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதி—"காலேஜ் ஹாஸ்டல்." ஜன்னல் வழியாக வெளிச்சத்தைக் கண்டவுடன் பலவிதசிந்தனைக்குள்ளாகி இருக்கும் நாம் மனதை இனி சிதற விடாது ஒரு நிலைப்படுத்திக் கொள்ளலாம் அல்லவா? மாணவர்கள் அறையில் வெளிச்சம் என்றால் பரீக்ஷைக்குப் படிக்கிறார்கள் என்று முடிவுகட்டிவிடலாம். ஆனாலும் ஒருசந்தேகம்! நூற்றுக்கணக்காக உள்ள அறைகளில் ஒன்றில்கூட வெளிச்சம் இல்லாதிருக்கும்போது இந்த ஒரு அறையில் மட்டும் அவ்வளவு அக்கரையுடன் படிக்கும் மாணவனைப்பற்றி அறிந்துகொள்ளத் துடிப்பது இயற்கைதான்.

"பொம்பள சிரிச்சாப்போச்சு, புகையிலை விரிச்சாப் போச்சு" என்று கூறுவார்கள். நாமும் எட்டிப் பார்த்தால் போச்சு! அடடே நாம் ஒரு மாணவர் என்றுதானே நினைத்தோம், மும்மூர்த்திகள் அல்லவா உட்கார்ந்து பரபரப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

"மிஸ்டர், முக்கியமான பிரண்ட்ஸ்களுக்கெல்லாம் போட்டாகிவிட்டது. இனி முன் வரிசையிலுள்ள 17 லேடிஸ்டூடென்ஸ்களுக்குபோட்டுவிடவேண்டியது தானே!" என்றான் ஒருவன்.

"ஆமாம் மிஸ்டர் தாங்கள் கூறுவதை நான் மிகவும் வரவேற்கிறேன். அவர்களுக்கும் அவசியம் அனுப்பவேண்டும். வரிசையாகஞாபகப்படுத்திவிடப் செய்யுங்கள்" என்றான் மற்றொருவன்.

"ஓகே! எனக்குஆட்சேபனை கிடையாது" என்று கூறிக்

கொண்டே கவரை டைப் மெஷி னுக்குள் செருகி விலாசங்களை டைப் செய்ய ஆரம்பித்தான் முதல்வன்.

விலாசமிட்ட கவர்களை எடுத்து மற்ற இருவரும் உள்ளே கார்டு ஒன்றைச் செருகிக்கொண்டிருந்தார்கள்.

"லேடி ஸ்டுடென்ஸ் பூராவும் முடிந்தது. வேறு எதவும் பாக்கி இருக்கிறதா சார்!"

"மிஸ்டர், அந்த லேடி லெக்சரர் 'குளிர்மதி'க்கும் ஒன்று போட்டுவிடுங்க"

"நல்லவேளை ஞாபகப்படுத்தினீர்கள். அவர்களுக்குப் போடாமல் வேறு யாருக்குப் போட்டாலும் பயன் இல்லை!" என்று குஷி செய்துகொண்டான் டைப் செய்த நபர்.

"சரி எல்லாம் ஆச்சு. இப்பொழுதே சென்று பூராவையும் கதவு இடுக்குவழியாக டெலிவரி செய்துவிட வேண்டியதுதான்" என்று இரண்டாம் நபர் கூற மூவரும் எழுந்து விளக்கை அணைத்துவிட்டுக் கிளம்பிவிட்டார்கள்.

3

வாரம்ஒன்று ஓடி மறைந்தது. 10 நாள் லீவ் எடுத்து சொந்த ஊருக்குச் சென்றிருந்த உலகநாதன், அன்று அதிகாலை வண்டியில் வந்து இறங்கி நேராக தன் ஹாஸ்டல் அறைக்கு வந்து சேர்ந்தான். அறை வெளியில் பூட்டிக்கிடந்தது. உடனே பக்கத்து காண்டிபன் அறையைத் தட்டி—ஆம், காலைமணி 8 ஆனாலும் எழுந்துவிடக்கூடியவர்கள் அல்ல பல கல்லூரிமாணவர்கள்—'குழந்தை' எங்கே என்று விசாரித்தான். அவன் காய்ச்சலாக டவுனுக்குள் சொந்தக்காரர்வீட்டுக்குச் சென்றுவிட்டான் என்றும், சாவியை 'அரசவைரத்திடம்'கொடுத்திருக்கிறுன்என்றும் கேள்விப்பட்டு டிரங்கை அங்கேயே வைத்துவிட்டு குளிப்பு அறைக்குச் சென்றுன்.

அங்குநண்பர்களின்வரவேற்பு பிரமாதமாக இருந்தது.

"வாங்க புதுமாப்பிள்ளை! எப்பொழுது வந்தீர்கள்?" என்றுன் ஒருவன்.

தன் அண்ணனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது, இனி அடுத்துத் தான்தானே! அதனுல்தான் புதுமாப்பிள்ளை என்று அழைக்கிருர்கள் என்று நினைத்துச் சிரித்துக்கொண்டே "இன்றுகாலை தான் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் வந்தேன்" என்றுன்.

"ஹார்ட்டி கன்கிராஜிலேசன் மிஸ்டர் உலகநாதன்! தந்தி கொடுக்க சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது" என்றுன் மற்றொருவன்.

"அதனுலென்னபரவாயில்லை"

"என்ன மிஸ்டர் உலகநாதன் என்னுடையதந்திகிடைத்ததா?"

என்றான் இன்னொருவன்.

"கிடைத்ததே!"

"என்னுடைய வாழ்த்துப் பொய்க்காதே?"

"எப்படி எழுதி இருந்தாய்? ஞாபகமில்லை!"

"அதுதானப்பா, நீ அடிக்கடி பிறருக்குக் கொடுப்பாயே! ஜாய் ஜாய் திஸ் ஈயர். பாய், பாய் நெக்ஸ்ட் ஈயர்"

"ஓ! அதுவா" சிரித்துக்கொண்டார்கள் இருவரும்.

இப்படி குளிப்பு அறையில் ஏகப்பட்டரகளை, கிண்டல், கேலி.

அரசவைரம் அறையை அடைந்து அவனிடம் தன் அறைச் சாவியைப்பெற்று காண்டீபன் அறையில் கிடந்த டிரங்கை தன் அறை சேர்ப்பித்தான். காலை டிபனுக்குச் செல்லும் மார்க்கத்தில் மலையாள பிரண்ட் ஒருவன் அறையைத் தாண்டிச் செல்லும்பொழுது அவன் உள்ளேயிருந்து ஓடிவந்து, உலகநாதனின் கையைப்பற்றி அறைக்குள் இழுத்துச்சென்று

"என்ன மிஸ்டர் உலகநாதன், சொல்லிக்கொள்ளாமல் திடீரென்று ஊர் சென்றுவிட்டீர்களே! அதிருக்கட்டும் பார்ட்டி எப்பொழுது கொடுக்கப் போகிறீர்கள்?" என்றான்;

"பார்ட்டியா? எதற்கு மிஸ்டர்"

"எதற்கா? நன்றாக இருக்கிறது புதுமாப்பிள்ளை! பேசாமல் உட்லண்ட்ஸில் இன்றே அரேஞ் செய்யுங்கோ"

"அட, நீங்க ஒருபக்கம், என் அண்ணன் கல்யாணத்திற்கெல்லாம் பார்ட்டியா?"

"அண்ணன் கல்யாணமா? என்ன மிஸ்டர் ஒரு பார்ட்டிக்குப் பயந்து கல்யாணமே செய்யவில்லை என்று கூறுகிறீர்களே. உங்கள் பெண்ணின் பெயர் என்ன? பட்டிக்காட்டுப் பெயராக இருக்குமோ? பத்திரிகையில்கூட போடாமல் விட்டுவிட்டீர்களே!"

"என்ன மிஸ்டர் உன்னி, விளையாடுகிறீர்களா? பெண்ணின் பெயர், பத்திரிகை, அது இது என்கிறீரே. சத்தியமாக என் அண்ணனுக்குத்தானையா கல்யாணம்"

உடனே உன்னி, தன்மேஜைக்குள் வைத்திருந்த அழைப்பிதழ் கார்டு ஒன்றை எடுத்து நீட்டினான். அதைப் பார்த்தபொழுது உலகநாதனுக்கு உலகமேபுரண்டு தலையில் விழுந்ததுபோல் இருந்தது. அதில் தனக்குக் கல்யாணம் என்றும், அவசியம் வரவேண்டும் என்றும் தங்க அச்சு எழுத்துக்களால் அழகாகப் பொறிக்கப்பட்டிருந்தது. தன் அண்ணனின் கல்யாண அழைப்பிதழ்கூட அவ்வளவு அருமையாக இல்லை. கண்கள் லிப்ஸ்டிக் போன்று சிவந்தது. ஆத்திரம் பொத்துக்கொண்டுவந்தது.

"மிஸ்டர் உன்னி, உன் அம்மா மீது சத்தியமா சொல்லுகிறேன் எனக்குக் கல்யாணம் ஆகவில்லை; என் அண்ணாவிற்குத்தான். எந்த அயோக்கியனோ வேண்டுமென்று இப்படிச் செய்திருக்கிறான். இதைத் தீர விசாரிக்கவேண்டும். எங்கே அந்தக் கவரைக்கொடுங்கள், கையெழுத்து எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்"

"டைப் செய்து அல்லவா அனுப்பி இருக்கிறார்கள்"

"ஓகோ! நன்கு திட்டமிட்டுத் தான்செய்திருக்கிறார்கள். இவர்களை இலேசில்விட்டுவிடப்போவதில்லை" என்று கூறி கோபத்துடன் வெளிக்கிளம்பினான்.

தன் அறையை அடைந்தான். பலர் புதுமாப்பிள்ளையைக் காண வந்தார்கள். அவர்கள்மீது எல்லாம் எறிந்துவிழுந்தான். பின் வெறிபிடித்தவன்போல் வராண்டாவில் நின்றுகொண்டு கண்டபடி ஏச ஆரம்பித்துவிட்டான். இதன் பின்னும் வாழ்த்துக்கூற வர, மற்றவர்கள் என்ன பைத்தியக்காரர்களா? ஹாஸ்டல் பூராவும் பரவிவிட்டது விஷயம்.

4

உலகநாதனின் உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது. அன்று மாலை குழந்தை தங்கி இருக்கும் அவனது சொந்தக்காரர் வீட்டிற்குச் சென்றான். அவனிடம் விஷயத்தைப் பூராவும் கூறி, தான் திட்டியதையும் கூறினான். "வாழ்த்துத் தந்திகள் பூராவும் என் பெயருக்கே வந்து ஊரில் குவிந்தன. அப்பாகூட கேட்டார். 'என் சிநேகிதர்களாகையால், உங்களுக்கு யார் எவர் என புரியாது என்று எனக்கே அடித்திருக்கிறார்கள்போல் தெரிகிறது' என்று கூறினேன். உண்மையிலேயே நானும் அப்படித் தான் நினைத்தேன். நான் அண்ணாவின் கல்யாண இதழ் கொடுக்காத பலர்கூட தந்தி கொடுத்திருந்ததைப் பார்த்தபொழுது சற்று திகைப்பாகவே இருநதது.

குழந்தை, இவ்வளவுநேரமும் பொறுமையுடன்கேட்டுக்கொண்டிருந்தான். காதுதான்கேட்டுக்கொண்டிருந்ததேதவிர மனது சிந்தனையில் லயித்திருந்தது.

"குழந்தை, இந்த முடிச்சுமாறிகளை அவசியம்கண்டுபிடிக்க

வேண்டும். இன்றே அப்பாவிற்குத் தந்திகொடுத்து வரச்சொல்லி போலீஸில் கம்ப்ளேண்டு செய்து விசாரிக்கச் சொல்ல வேண்டும். பிரஸ் பெயர்கூட இல்லாமல் கார்டு அச்சிட்டிருக்கிறார்கள் கயவாளிப் பயல்கள்'' என்று பழுக்கக்காய்ச்சிய இரும்புக் குழம்பின் குளத்திலிருந்து மடை திறந்தமாதிரி ஆவேசத்துடன் கூறினான்.

காரியம் மிஞ்சுகிறது என்பதைக் கண்டவுடன் குழந்தை மெதுவாக, யாரோ பிரண்ட்ஸ் தமாஷிற்காகச்செய்திருப்பார்கள் நீ வகுப்பில் எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறாய்? லேடி லெக்சரர் பீரியேடில் ரூபாய்களைக்கொண்டு சிங்கி தட்டுவதும், மேஜையில் தாளம்கொட்டுவதும் முன்வரிசையில் இருக்கும் லேடி ஸ்டூடன்ஸ்களின், பின்னால்தொங்கும் சாரித்தலைப்பை காலால் புட்பால் ஆடுவதும், சடைரிப்பன்களை முடிச்சவிழ்ப்பதும் போன்ற பல வேலைகளைச் செய்வாயே, அவற்றைஎல்லாம் அவர்கள் அவர்களது பெற்றோர்களைக் கூட்டி வந்து நீ கூறுவதுபோல் செய்திருந்தார்களானால் எப்படி இருக்கும்?

பேப்பரிலே வழக்கு விஷயம் வரும். ஆளவந்தான் தேவகிமேனன் கேஸ்மாதிரி தினமும் ஆசையோடு எல்லோரும் பார்ப்பார்கள்......''

''அப்படியா? பேப்பரில்வேறு போட்டு கேவலம்செய்வார்களோ அப்படியானால் அதுவேண்டாம். இது யார் செய்தது என்று கவனித்து தக்கபடி பதிலுக்குச் செய்யவேண்டும்'' என்றான்.

குழந்தைக்கும் குன்றிஇருந்த உயிர் மீண்டது. ''அதற்கென்ன நான் சுகமாகி வந்ததும் கவனிப்போம்''என்றுகூறி அனுப்பிவிட்டான்.

5

கல்லூரி வகுப்பிற்கு மாணவ மாணவிகள் சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இரு மாணவிகள், தூரத்தில் வரும் உலகநாதனை கிண்டல் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் சற்று நடையைத் தளர்த்தினார்கள். அவன் அருகில் நெருங்கியதும்,

''என்ன மிஸ்டர் உலகநாதன் உங்கள் ஒய்ப் எப்படி இருப்பார்கள்'' என்றாள் ஒருவள்.

''அவர் பெண்ணின் பெயரை குறிப்பிடாததிலிருந்தே தெரியவில்லையா? கருப்பா, பனங்கொட்டைமாதிரி இருப்பாள் என்று'' இப்படி மற்றவள்.

சூடுஏறிய உலகன், ''எல்லாம் உங்களைப்போலதானிருப்பாள்'' என சுரீர் என்று பதில் கொடுத்துவிட்டு விரைவாக நடையைக் கட்டினான்.

வகுப்பில் லேடி லெக்சரர்

பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். ஒருவாரமாக அடக்கி ஒடுக்கி வைத்திருந்த பழைய தாளவாத்தியத்தை மெது வாக ஆரம்பித்தான் உலகன்.

உடனே லேடி லெக்சரர் மிஸ் குளிர்மதி அவர்கள் "ஹலோ மிஸ்டர் உலகநாதன், இவ்வளவு காலமும் ஆடியது சரி, இனி நீ உனது பொறுப்பை உணர்ந்து நடக்கவேண்டும். இதுவரை ஒத்தையாக இருந்தாய். இப்பொழுது இரட்டையராகிவிட்டாய். இனி இவ்வித கெட்ட பழக்கங்களை எல்லாம் விட்டுவிட வேண்டும்" என்று நாசூக்காகக் கூறினர்.

மாணவ, மாணவிகள் அனைவரும், அலைஅலையாக சிரிப்பொலியை எழுப்பினர்கள்.

"தாங்களும், நானும் ஒத்தை ஒத்தையாகத்தான் நிற்கிறோம்" என்று ஆத்திரத்துடன் கூறினன் உலகநாதன். அவர்கள் அதுவரை தெரிந்துவைத்துக்கொள்ளவில்லை, உலகநாதனின் கல்யாணம் கார்டு அளவில்தான் என்று.

6

குழந்தையும்குணமாகி ஹாஸ்டல் வந்து சேர்ந்தான். 'ஆறிய கஞ்சு, பழங் கஞ்சுதானே' நாட்கள் பல கடந்தது உலகநாதனின் ஆத்திரத்தையும் தளர்த்திவிட்டது. சந்தர்ப்பத்தை அறிந்து அரசவைரம், காண்டீபன், தான் ஆகியமூவரும்தான் தமாஷிற்குச் செய்ததாகக் குழந்தைகூறினன். ஆனல் உலகநாதன் இதை நம்ப மறுத்துவிட்டான். பின்னல் மீதி இருந்த அழைப்புக் கார்டுகளைக் கொண்டுவந்து காண்பித்த பின்புதான்நம்பவைக்கமுடிந்தது

மாணவர்களின் இந்த காலேஜ் புதுமாப்பிள்ளை தமாஷிற்கு கோல்டன் லெட்டர்ஸில் கார்டு அச்சிட்ட வகையில் செலவு ரூ 25. நண்பர்கள் வாழ்த்துத் தந்தி வகையில் சுமார் ரூ. 50. இவ்வளவும், வீட்டிற்கு செலவு கணக்கு அனுப்பும் ஜாபிதாவில் புத்தகம் வாங்கியது அல்லது ஏதாவது ஒரு பீஸிற்குக் கட்டியது என்ற கணக்கில் எழுதப்பட்டிருக்கும் என்று நாம் கூருமலே நேயர்கள் அறிந்துகொண்டிருப்பார்கள். ★

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி'யின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

த. தம்பித்துரை—நியூஸ் ஏஜண்ட்,

நெ, 226, ஆஸ்பத்திரி ரோடு. :: யாழ்ப்பாணம். (சிலோன்)

வாழ்வதற்கே வாழ்க்கை!

(அறிவுமணி—பண்ணுருட்டி)

கணவனும் மனைவியும், கரும்பும் அதன் சுவையும்போல் இல்வாழ்க்கையைச் சுவைத்து இன்புற்று வாழ்வதற்கே வாழ்க்கை!

கண்ணின் மணிகளைப்போல் கன்னித் தமிழ் நாட்டிற்கு நல்ல மக்களை ஈந்து எந்நாளும் சேவை செய்து இயல்புடன் வாழ்வதற்கே வாழ்க்கை!

அறியாத மக்களுக்கு கதை, கட்டுரை, கவிதைமூலம் வாழ்க்கையின் இரகசியத்தை அறிவிக்கும் 'மகிழ்ச்சி' மாத இதழ் படி வாழ்வதற்கே வாழ்க்கை!

இகத்தைத் துறந்து பரத்தை நோக்கிப் பயணம் செய்யும் பண்பற்ற மக்களுக்கு பகுத்தறிவை மகிழ்வுடன் ஊட்டி மட்டிலா மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே வாழ்க்கை!

ஈயாமல் பணத்தை இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துக் கஞ்சத்தனமாய் கசந்தவாழ்வு வாழாமல் ஆனந்தமாய் வாழ்வதற்கே வாழ்க்கை!

வள்ளுவர் சொன்னதுபோல் வளமார் தமிழர்காள்! இல்லறத்தைப் பேணி இனிது வாழ்ந்து ஓயாமல் சமூகத் தொண்டு செய்து ஒய்யாரமாய் வாழ்வதற்கே வாழ்க்கை!

துணைவனும் துணைவியும் கலந்தாலோசித்து காரியங்களைச் செய்து அடிக்கரும்பின் குன்றாச் சுவைபோல் என்றும் இன்பமாய் வாழ்வதற்கே வாழ்க்கை!

தமிழர் பண்பை மனதிலிறுத்தி கடமையைச் செய்து மடமையைப் போக்கி அன்பைப் பெருக்கி அறிவை வளர்த்து நலமாய் வாழ்வதற்கே வாழ்க்கை!

கண்ணீருக்கிடையே...!

— பி. எஸ். மணியன் —

"என்ன சொக்கு! அப்படி வானத்தையே விழுங்கிவிடுவது போலப் பார்க்கிறாயே, அந்த நிலாவுக்கும் உன் முகத்துக்கும் பொருத்தம் பார்க்கிறாயோ?" சிந்தனை உலகிலே சஞ்சரித்த சொக்கி அழகையாவின் குரல் கேட்டுத் திரும்பினாள்.

"இல்லை மச்சான், இந்தச் சந்திரன் வேகமாக மேகத்துக்குள் போவதையும், அன்று நீங்கள் பெண் பார்க்க வந்தபோது நான் ஓடி ஒளிந்ததையும் ஒப்பு நோக்கிக் கொண்டிருக்கிறேன்!" அவள் முகத்திலே வெற்றிப் புன்னகை அரும்பியது. சந்திரனின் ஒளி அவளது சுந்தர வதனத்திலே பட்டுப் பிரதிபலித்ததால் உண்டான பொலிவு அவனது இதயத்தைச் சொக்கிச் சுழல வைத்தது.

"அடடே, உன் முகத்தைப் பார்த்தவுடன் எல்லாமே மறந்துவிடுகிறதே சொக்கு! சின்ன எஜமானி கோயிலுக்குப்போருங்களாம். நீயும் துணைக்குச்செல்ல வேண்டுமாம்......"

"போங்க மச்சான்! எப்போ பார்த்தாலும் உங்களுக்குக் கேலிதான்" என்றுரைத்த அவள் முகத்தில் பொய்க் கோபத்தை வரவழைத்துக்கொண்டாள்.

"நீ கோபப்படும்போதுதான் சொக்கு, சினிமாவில் சொல்வது போல், கோவைப்பழமும் வெட்கப்படும்படியாகிறது! சரி நேரமாகிறது எஜமானி காத்திருப்பார்" என்றுரைத்தனுப்பினான்.

* * * *

அழகையா, அந்த ஊர் மிராசுதார்பொன்னம்பலத்தின்வீட்டு வேலையாள். அவனது பரம்பரையே மிராசுதார்வழிவழியாக அவர்கள் வீட்டில் அடிமைத்தனம் செய்பவர்கள். அழகையா—சொக்கி திருமணம் நடைபெற்று நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. மலரும் மணமும், வீணையும் நாதமும் என்றெல்லாம் கூறுவது கதாசிரியர்களின் கற்பனைமட்டுமல்ல, வாழ்வின் நிகழ்ச்சிதான் என்பதற்கு அவர்கள் வாழ்க்கை உவமையாக இருந்தது.

அன்று, கலியாணத்துக்கு முன்பு மாப்பிள்ளையைப் பார்க்க வெட்கப்பட்டுக்கொண்டு ஓடி மறைந்தது, தாலி கட்டும்போது

குறும்புக்காரனுன அழகையா அவளது மலர்க்கரத்தை நோகுமாறு கிள்ளிவிட்டது, பின்பு தனிக்குடித்தனத்தின்போது அவளைக் கவ்வியிருந்த சங்கோஷத்தைவிலக்கிப் பேசவைக்க அவன் பட்ட பாடு—இவைகளையெல்லாம் நினைத்தவாறு நடந்துகொண்டிருந்த சொக்கியின் அதரத்தைச் சிரிப்பு அழகுபடுத்திக்கொண்டிருந்தது.

"சொக்கு! சிரிப்பு பலமாக இருக்கிறதே!" எனும் பீடிகையோடு வரவேற்றார் முதலாளி பொன்னம்பலம். அவள் முகத்திலே வெட்கம்ஆட்சிநடத்தியது. பொன்னம்பலத்தின் மனதில் என்னென்ன காட்சிகளோ மாறி மாறி எழுந்தன...சிங்காரிப்பில்லாமலேயே சிந்தையைப்பிடித்து இழுக்கும் சிவந்த உருவம், சிரிப்பு வலையால் இதயத்தைச் சுண்டும் மோகனப் பற்கள், அன்னம் நாணும் நடையால் ஆசைப் போதையூட்டும் இடையழகு...அவர் விழிகள் அவள் உடலைமேய்ந்துகொண்டிருந்தன.

"சரி சொக்கு! மேலே போய் என் அறையைச் சுத்தப்படுத்திக்கொண்டிரு" எனும் உத்தரவை அவர் நாக்கு உதிர்த்தது.

பொன்னம்பலம் ஏராளமான சொத்துக்களின் ஏகசக்கரவர்த்தி வாழ்க்கையில் நாற்பத்தைந்து வருடங்களைத் தாண்டியவர். பழுத்த வைதீகர். திருநீறும் சாந்துப் பொட்டும் எந்நேரமும் அவரது உடலில் கொஞ்சுபவை. பகவானின் பிரதி பிம்பமெனப் பாமர மக்களால் பகரப்படுபவர். அந்தஊர் அம்மன் கோவிலுக்கு அழகிய பொற்றாமரைக் குளம் அமைத்துக் கொடுத்தது அவர் தான்! தேர்த் திருவிழாவின் போது ஆலயத் தரகர்களின் முதல் தாம்பூலம் அவருக்கே. சாமிக்குத் தங்கத்தால் கிரீடம் செய்து தந்த தர்மப்பிரபு—இவையெல்லாம் மடமையில் ஆழ்ந்திருந்த மக்களின் மதிப்பைப்பெற அவர் செய்த மகாமேதைச் செயல்கள்!

இத்தகைய பக்தர் பொன்னம்பலத்தின் இதயத்தில் சொக்கியைக் கண்டதுமுதல் ஓர்வித அகோர நினைவு படமெடுக்க ஆரம்பித்தது. நாளாவட்டத்தில் அந்த எண்ணம் உச்ச நிலையை எட்டியது. அன்று, வீட்டில் அவரைத்தவிர யாருமில்லை. மனைவியும் மகளும் திருமண காரியமாக அடுத்த ஊர் சென்றுவிட்டனர். இதுவேசமயமெனக் கருதி சொக்கி வருவதற்கு ஏற்பாடு செய்தார். அழகையாவுக்கு அவரது திட்டமெதுவும் தெரியாது.

சொக்கியை மேலே அனுப்பிய பொன்னம்பலத்தால் அங்கு நிற்கவே இயலவில்லை. நெஞ்சம் திக்திக்கென்று அடித்துக்கொண்டது. கன்னக் கோலைக் கையிலேந்திய கள்வன்போல அடிமே

லடிவைத்துச்சென்றார் மாடிக்கு. குனிந்த நிலையில் அறையைச் சுத்தம் செய்துகொண்டிருந்த சொக்கியின் கட்டுக் குலையாத கவர்ச்சியைக் கதவோரத்தில்நின்று கவனித்தவாறிருந்தார். காம வெறி அவர் கருத்துக்குத் திரையிட்டது. மெல்லநடந்து சொக்கியின் மெல்லிய கரத்தைத் தொட்டார்.

திடுக்கிட்டாள் சொக்கி. "என்ன எஜமான் இதெல்லாம். கையை விடுங்கள்" பரிதாபம் அவள்குரலிலேகலந்தொலித்தது

"சொக்கு...உன்மீது...ரொம்ப...நாளாக..." ஏதேதோ உளறினார் பித்துப் பிடித்தவர்போல!

அவருடைய முரட்டுக்கரங்கள் அவளதுமலருடம்பை வளைத்தன ...மருண்டாள்... மிரண்டாள்... என்ன செய்வதென்றே தெரியவில்லை, உதவிக்கு எவருமே இல்லை. அவள் மனம் கோபக் கனலைக்கொட்டியது. சுற்றிலும் நோக்கினாள். எதிரிலே உள்ள சுவரில் கண்ணன் கோபியருடன் கொஞ்சும் படம் அவளைப்பார்த்துச் சிரித்தது. மேஜையின்மீது மின்னிய கத்தி கண்களில் பட்டது. அவள் வதனத்திலே ஓர் பிரகாசம்...கத்தியை நோக்கிக் கரம் நீண்டது.

அதற்குள் கதவு திறக்கப்பட்டது. அழகையா உள்ளே நுழைந்தான். அவனது அரும்பு மீசைகள் துடித்தன. கரங்களில் சினம் காட்டாறாகப் பாய்ந்தது. அடுத்த நிமிடம் அழகையாவின் கரம் முதலாளியின் முகத்தில் துள்ளத் துவங்கியதன் எதிரொலி அவரது கன்னத்தில் தடுப்புகளுக்கும், அவருடைய மூர்ச்சைக்கும் காரணமாயின.

சொக்கியை அழைத்துக் கொண்டு மலர்த் தோட்டத்தின் மத்தியிலுள்ள தனது மண் குடிசையை அடைந்தான். "அப்பொழுது நான் வராவிட்டால் அந்தக் கத்தியால் அயோக்கியனின் ஆவியைக் குடித்திருப்பாயல்லவா சொக்கு!" "ஆம்! பணக்காரனென்றால்பெண்களைப் பாஞ்சாலிகளெனக் கருதத்தான் வேண்டுமோ! வயது கடந்த போதிலும் வாலிபனாகவே இருப்பதாக எண்ணிக்கொண்டான் மடையன்" இதைச் சொல்லும் போதும் அவள் முகம் கொல்ல

னின் உலைக் களமாகக் கொப்பளித்தவாறேயிருந்தது.

மறுதினம்...இரு போலீஸ் அதிகாரிகள் அழகையாவின் குடிசைநோக்கிவந்தனர். பொன்னம்பலத்தின் மாளிகையில் காணாமற்போன நகைகள் அவனது வீட்டிலிருப்பதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையின் முடிவு அழகையாவுக்கு மூன்றுவருட கடுங்காவல் தண்டனை கொடுத்தது.

* * * *

சிறைக் கம்பிகளுக்கிடையே அழகையாவின் மனம் இப்பணக்காரப் பகட்டு உலகின் பாரபட்சத்தையே எடை போட்டவாறிருந்தது. பணம், நிரபராதியின் வாழ்வை நசுக்கவும், குற்றவாளிகளைக் கோமான்களாக உலவவிடவும் பயன்படுகிறதேயெனும் வாதத்தை நேரிலேயே கண்டுவிட்ட அழகையாவின் மனக்கண்ணிலே சொக்கியின் சாந்த முகம் விடுதலையை வரவேற்கக் கண்ணீருக்கிடையே காத்திருப்பது மின்னலிட்டு மறைகிறது.

மாணவ மாணவிகளுக்கு

திடீர்க் குபேரன்!

—சதி—

“அடுப்பிலுள்ள பாத்திரத்தில் அரிசியை அரித்துப் போட்டுக் கொண்டிருந்தேன். அப்போது கொல்லைப்புரம் ‘தொப்’ என்று சப்தம்கேட்கவே விரைந்தோடிப் பார்த்தேன். அவ்வழியே கடந்து சென்ற கழுகுஒன்று ஒருபொட்டலத்தைப்போட்டுவிட்டுச்சென்றிருக்கிறது. கழுகு எப்போதும் செத்த எலி, வீதியில் தின்று கொண்டு செல்லும் பிள்ளைகளிடம் பிடுங்கிய வடை முதலியவைகளைத்தான் தூக்கிச் செல்வதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால் என் அதிர்ஷ்டம்போலும் அது ஒரு துணிப் பொட்டலமாகஇருந்தது. அதை ஆவலோடு திறந்துபார்த்தேன். என் கண்களை என்னாலேயே நம்பமுடியவில்லை. மினுமினுவென்று ஜெகஜோதியாக ஜொலிக்கும் ஏராளமான தங்கநகைகள் இருந்தன. எந்தப் பணக்காரச் சீமாட்டியோ, குளத்தடியிலோ, குளிக்கும் அறையிலோ கழற்றி வைத்திருந்ததைத் தூக்கி வந்திருக்க வேண்டும் என்று அந்த அம்மாவுக்காகச் சிறிது இரக்கப்பட்டுவிட்டு, என்னுடைய சீர்கேடான பொருளாதார நிலையை இதைக் கொண்டு சீர்படுத்திக்கொள்ளலாமென்று பெருமிதம் அடைந்தேன். ஆனாலும் குடிசையில் வாழும் நம்மால் எப்படி அதை பத்திரப்படுத்த முடியும், அதை எப்படி பணமாக்குவது என்ற பெரும் பிரச்சனை என்னைக் கலக்க ஆரம்பித்தது. ஆனாலும் இந்தப் பணத்தைக்கொண்டு என்ன செய்யலாம் என்று என் மனம் சிந்தியாமல் இல்லை.

குடியிருக்கவீடுவாங்குவோமா அல்லது குழந்தைக்கு உடுத்த உடை தைப்போமா, பால் வாங்குவோமா பழம் வாங்குவோமா, சினிமாவிற்குப் போவோமா சிங்காரமாகஇருப்போமா என்றெல்லாம் என் மனம் சிந்திக்காமல் இல்லை. அதேநேரம் அன்றாடு கூலிச் சம்பளம் பெற்று வரும் அன்பான கணவனுக்கு கௌரவமாக தொழில்செய்ய ஒருகடை வைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் ஆசையோடு எண்ணிக் கொண்டிருந்தேன்—திடீரென்று என் மகனின் அலறல் விழிப்படையச்செய்தபோதுதான் என் கனவுநிலை கலைந்தது.”

அன்புள்ள மாணவ மாணவிகளே, மேற்கண்டபடி மணியின் தாயார் கண்டதுபோன்று உடல் உழைப்பின்றி திடீர் தனவந்தராக நினைக்காது, ‘முயற்சி மெய் வருந்தக் கூலிதரும்’ என்றபடி முயன்று பொருள் ஈட்ட முற்படுங்கள்.

சிகரெட்டும் முத்துவும்

— மா. முத்துராமலிங்கம் —

காட்சி 1

[தெருவில் முத்து சிகரெட் பற்றவைக்கும்பொழுது ஆச்சரியமாகப்பார்த்து நாராயணன்...]

நா: இதென்னப்பா?

மு: சிகரெட்டு!

நா: இது கெடுதலாச்சே

மு: கெடுதலா? புகை விடுதலா?

நா: பின் என்னவாம்?

மு: அது எனது தோழன்!

நா: என்ன தோழனா?

மு: ஆம்நண்பனே! இதைக் கேள்! எத்தனையோ ஏழைகள் சோற்றுக்கு வழியற்றுத் திரிகிறார்கள்; அவர்கள் அக்காரணத்தால் திருடுகின்றனர்; அங்கே திருட்டுதோழனாகிறது! ஏராளமானவர்கள் நாவல்களைப் படிக்கிறார்கள்; அங்கே நாவல் தோழனாகிறது! பலர் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கிறார்கள்; அங்கே இயற்கை தோழனாகிறது! அந்தப் பட்டியலிலே நான் சிகரெட்டையும் தோழனாகக் கருதுகிறேன்! அதைக் கைவிட முடியாது! கனவிலும் முடியாது!

நா: சரியான விளக்கம் ஆனாலும்......

மு: சஞ்சலக்காரர்களுக்குக் கலக்கம்தருகிறது என்கிறாயோ?

நா: இல்லை! 'மந்திரி குமாரி' பார்த்த மயக்கம் என்கிறேன்!

மு: ஆகா!

நா: ஆமா, நீ எந்த சிகரெட் குடிப்பாய்?

மு: எல்லாம் குடிப்பேன்! விதவிதமான இன்பங்களைக் கிளப்பும்வில்ஸ், சிலநேரங்களில்! பெரும்புகைகிளப்பும் பிளேயர்ஸ் சிலபோழ்து! சிறப்பாக இருக்கும் சிசர்ஸ் சீசன் சமயங்களில்! கேணிபோல் இன்பம் ஊறும் கேப்டன் சில சமயங்களில்! சோர்ந்த உள்ளம் எனும் கத்திக்குச் சாணை பிடிக்கும் யானை சிறிது நாட்கள்.

நா: போதும்! போதும்! நிறுத்து உன் புகழ்மாலையை! இப்படி எல்லாத்தையும்குடிச்சா உடம்பு கெட்டுப்போயிடாதா?

மு: ஏன் கெட்டுப்போகும்? இந்தியாவில் சிலர் காலத்துக்கு ஏற்றாற்போல் கட்சியின்திட்டங்களைமாற்றிக்கொண்டதால், அவர்கள் கட்சி மாய்ந்தாபோயிற்று? நான் இருக்கும் தகுதிக்கேற்ப சிகரெட்டை மாற்றிக்கொள்கிறேன். அடடே! கந்தன் வருகிறான்!

[சிகரெட்டை மறைத்து அவன் வந்ததும் வேகமாகக் கைகுலுக்க.........]

க: ஆ! ஆ! அய்யோ! அப்பா! விடு கையை!

மு: என் கையை விடச் சொல்கிறாய்?

க: அய்யய்யோ! நெருப்புச் சுடுதே!

மு: ஓ! சிகரெட்டோடே கை கொடுத்திட்டேனா? மன்னிச்சுக் கப்பா! என்ன நல்லா இருக்கிறாயா?

நா: இப்ப அவன் காட்டிய மாடினதே காட்டுதே!

க: முட்டாள்! நேற்று ஒரு பேப்பர் பார்த்தேன். அதிலே இந்தியாவிலே ஆண்டுக்கு எழுநூற்றறுபது கோடி செலவழிப்பதாக எழுதியிருக்கான்.

நா: அதுலேஒருகோடி நம்ம முத்து குடிக்கிறான்னு எழுதியிருந்தானோ?

மு: ஆமா! அதோட "மதுரையைச் சார்ந்த திரு. நாராயணன் சில ஆண்டுகளுக்குமுன் நெல் மண்டியிலே நெல் அளந்து கொண்டிருந்தார்" எனவும் எழுதியிருந்தான்! எவனோஒருத்தன், "வேலையத்தமாமியா மருமகனைப் போட்டுத் தாலாட்டினாப்"போல வெட்டிக் கணக்கு எழுதியிருக்கிறான். அதை நீ விளம்பரக் குழு செயலாளர் மாதிரி சொல்லிக்கொண்டு திரிகிறாய்! உங்களுக்கு என்ன தெரியும் சிகரெட்டின் அருமையைப்பற்றி? அந்தச்

"சிகரெட்டின் பெருமை
சொல்லப்போகுமோ?
சொல்லப்போகுமோ?
அந்தக் கீட்ஸ் ஆனாலும்
எந்தப் பூட்ஸ் ஆனாலும்
கற்பனைக் கிருப்பிடமாய்
நற்பயன் விளைக்கும் தூய" (சி)

நா: போதுமப்பா அந்தப் புகழ்ச்சிப் படலம்! வாழ்த்து அதிகாரம் முதலியன!

மு: "சிகரெட் வரலாறு கிண்டல் அல்லவே அல்ல"

நா: அடடா! மண்டையடிக்குதே!

மு: "மண்டையடி அழிய மருந்தொன்றிருக்குதாம்..."

நா: ஏ! ஏ! இதென்ன பழங் காலத் தெருக்கூத்தா? திரும்பினா ஒருவிருத்தம்! காதைத்திறந்தா ஒரு ராகமாலிகை! மாலைவிழுந்ததும் ஒரு மாஸ்டர்பீஸ்! சீனைத் தூக்கினால்ஒருசிந்து என்றுபாட?

மு: உனக்கென்ன தெரியும் இந்த சிகரெட்டின் அருமை! நம்ம புதுமைச் சித்தர் ஒரு பாட்டுப் பாடியிருக்கார் பாரு! சொல்றேன் கேளு!

"அப்பனே, சிகரெட்டின்
பெருமை கேட்பாயாகின்
சிறுபொடியும், ஒருகாப்பியும்
அருகில்வராது! அகன்றுபோகும்
குளிரொழிக்கும்!
கூதல் தவிர்க்கும்!
சோம்பல் ஓட்டும்!
சோர்வு களையும்!

சுறுசுறுப்பு வரும்!
விறுவிறுப்புக் காணும்!''
என்று பாடியிருக்கிறார். அதன் உட்பொருளை உணர்வது எளிதன்று. எவ்வளவோ எழுத்தாளர்களுக்குச் சமய சஞ்சீவியாயிருந்து சிரஞ்சீவி இலக்கியங்களை உண்டாக்குவதற்கு சிறந்த உதவியாள் இந்தசிகரெட்டுதான்! நான் வருங்காலத்திலே சிகரெட் கம்பெனிவச்சா, இப்போ சோப் விளம்பரம் பண்ணுவதுபோல் "இலக்கியப் புலி, எழுத்துலகச் சிங்கம் திரு. காடி எங்கள் குரங்கு மார்க் சிகரெட்டையே குடிக்கிறார்'' என்று தினசரிகளிலே முதல் பக்கத்திலே போடுவேன். தெரியுமா?

நா: என்னமோ? சிகரெட் குடிப்பது வாள்மேல் நடப்பது போல்! எச்சரிக்கை!

மு: தேக்கைக் கரையானரிக்கும் என்று நீ கவலையடைய வேண்டாம். மேலும் இது நாகரீகத்தின் முதற்படி!

நா: அதனால்தான் போலும் யாரோ, "நாகரீகம் அழிவின் ஆயுதம்'' என்று சொல்லியிருக்கிறான்!

மு: அவன் கிடக்கான் முட்டாள்! அப்படிச் சொன்னவன் அநேகமா சென்னைச் சட்டசபைஉறுப்பினராகத்தான்இருக்கணும்!

காட்சி 2

[முத்து தன் வீட்டில் ஏதோ அலறிக்கொண்டு அரற்றுகிறான். கையிலிருக்கும் சிகரெட்டைப் பார்த்து........]

மு: முத்தன் வந்திருக்கிறான் வெறுங் கையுடன். ஏன்என்று பார்க்கிறாயா? ஏ! சிகரெட்! உன்னையேகுடித்துக் களித்துக்கிடந்த என்னை நீ மோசம் செய்யலாமா? சோறு கைவிட்டாலும் சிகரெட் காப்பாற்றும்என்று நம்பியிருந்த என்னை இக்கதிக்கு ஆளாக்கலாமா நீ? எவனுடைய காசால், ஆதரவால் உன் புகழ் அதிகமாயிற்றோ, அவனுக்கா நீ நாசம் புரிவது? இது சரியா? நான் செய்துள்ளசெலவுகளை நீ அறியமாட்டாயா? எத்தனைடின்களைக் காலியாக்கினேன்! ஒரு வஞ்சமும்செய்யாத என்னையா அழித்தாய் பாவி? எனக்கு நீ இப்படி ஏன் வஞ்சம்புரிந்தாய்? இதற்கு எவ்வாறு உன் மனம் இடம் தந்தது?

சிகரெட்டே! இதோ பார் என்னை! ஏழையைப் பார்! உன்னையே குடித்துக் குடித்துத் தேய்ந்திருக்கும் என்னைப் பார்! சீருடன்இருந்து இன்று சிதைந்து கிடக்கும் என் உடலைப் பார்! வலுவுடன் இருந்து இன்று வத்தலாக இருக்கும் என் உடலைப் பார்! (கீழே கிடந்த செய்தித்தாள் ஒன்றை எடுத்து) விளம்பரம்! பிரிண்டர் அடித்த பல வகைக் கலர்கள்! கம்பெனிக்காரன் அளித்த விளம்பரம்! வகை வகையான பெயர்கள்! முதலாளி

அளந்த அளப்பு! என்னைப் போன்றமாணவர்கள் முன்னேறுவதைத் தடுக்கும் தடைகள்!

இதோ பார்! ஏழை உமிழ்ந்த கோழை! எரிந்துபோன குச்சிகள்! சிகரெட்டின் சாம்பல்! மாணவனே! நீயா இப்படிக்கேட்கிறாய் என்று கேட்கிறாயா நீ? கேள், நெஞ்சுரம் இருந்தால்! இருமலின் தாளத்தோடு பதில் சொல்லுகிறேன்! இன்பத்தை நாடுபவன் உன்னை இழந்தால் அவனை நீ அழிப்பதா? உனக்கு இன்பத்தின் அடையாளமே தெரியாதா? இன்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும், உனக்கும் நெடுநாள் பகையா? உனக்கு உயர்ந்த சிகரெட் என்ற பெயர் தகுமா?

ஏ! சிகரெட்! ஏழையின் நெஞ்சில் சளி! கோழை! அதிலிருந்து கிளம்பும் கிருமிகளைப் பார்! (சிரிப்பு, இருமல்) பார் கோழையை! (சிரிப்பு, இருமல்) பாவம் நீ என்ன செய்வாய்! நான்தான் முத்தன்! உன்னையே குடித்துத் திரிந்தேன்! அதுஎன் முட்டாள்தனம்! என் மூடத் தனத்தால் இருமல் வலுத்தது! அது உன் செயலால் வந்தது என நினைத்தேன்! அதுவும் என் மூடத்தனம்! உன்னிடம் உறவாடினால் என் குறை தீரும் என்று எண்ணினேன்! அதுவும் மூடத்தனம்! ஆனால் எனக்கு இருந்த இன்பம் அழிந்தது!

[கந்தன், நாராயணன், கனி, ஐவன் ஆகியோர் நுழைதல்]

க: என்ன முத்து! அன்று ஓரேயடியாய் அளந்தவன் இன்று ....

நா: மயான காண்டம் நடிப்பதேனோ?

மு: நான்என்ன தெருக்கூத்தாடியா மயானகாண்டம் நடிப்பதற்கு?

க: நாங்க இந்நேரம் வரைக்கும் நீ பேசினதை எல்லாம் வெளியேயிருந்துகேட்டுக்கொண்டுதானிருந்தோம்!

மு: ஒட்டுக் கேட்கிறதிலே புலிதான் போங்க!

நா: இல்லாவிட்டால் ஒன்னோடெ "ஆழம் தெரியாது காலை விட்ட" கதையைக் காண முடியுமோ?

க: முத்து! இருந்தாலும் உன்நிலை இவ்வளவு மோசமாகக் கூடாது! ஆளைப்பார்க்கிறதுக்கு என்னமோ முன்போல மொக்கையாய்த்தானிருக்கிறாய், ஆனால் உள்ளேதான் ஒன்றையும் காணோம் அரைக் கூட்டைப் போல! இப்படி உன் நிலைமை மோசமாகப்போனதற்காக ஆண்டவனிடம் மன்றாடுகின்றோம்! அட! அரோஹரா!

கனி: அரே, அல்லா!

ஐ: ஆ, மென்!

மு: டே! டே! கொஞ்சம் போனா அனுதாபத் தீர்மானம் கூட நிறைவேற்றிடுவீங்கபோலேயிருக்கே!

க: ஏன், உன்வாயாலேஇந்த

வார்த்தையைச் சொல்றே? அப்படிச் சொல்லாதேப்பா! (தேம்பிக்கொண்டு) எவ்வளவோ கனவு கண்டது இப்படியா போகணும்! எவ்வளவு அழகாப் பேசுவாய்! என்ன அருமையாய்ச் சிரிக்க வைப்பாய்! உனக்கா இந்த டி. பி. வரவேண்டும்! அநியாயம்! அநியாயம்!

மு: எனக்கு யாருடா டி.பி. வந்திருப்பதாகச் சொன்னது? அவனை இங்கே கொண்டா!

க: ராதாதான் சொன்னான்! அதனாலேதான் உன் வீட்டுக்கே வந்திட்டோம்! வரும்போது நீ பட்ட தொல்லையை இந்தக் காதால் கேட்டோம்! (மறுபடியும் தேம்பி, சளியை வளித்து நாராயணன் மேல் தடவிக் கொண்டே) இருந்தாலும் இப்படிக் கூடாது!

நா: இருந்தாலும் இப்படிக் கூடாதுதான்! (கூறிக்கொண்டே கந்தனை அடிக்கிறான்)

க: டே! ஏண்டா அடிக்கிறே!

நா: நீ ஏண்டா பேச்சு வாக்கிலே என்மேலே சளியைத் துடைக்கிறே!

மு: டே! பொடியன்களா!

நா: என்னங்க, பெரியவரே?

மு: எனக்கு டி. பி கிடையாது! கிடையவே கிடையாது!

நா: அப்படின்னு நாங்க வரும்போது அலறிக்கொண்டிருந்தது எவன்கொலோ?

மு: நான் ஓர் பள்ளி நாடகத்திற்கு எழுதிய கதையை அல்லவா அப்படிப் படித்துக் கொண்டிருந்தேன்!

க: அட, பாவி!

நா: அட, முட்டாள்!

மு: யாரு? நீயா?

நா: இல்லே, அந்த ராதா!

(திரை)

take home a NEW Remington PORTABLE TYPEWRITER

for an initial payment of Rs. 125
pay balance monthly.

V. V. DHANUSHKODI
NADAR & SONS,
P. B. No. 2,
TUTICORIN.

இது நிஜமா?

[வாகன்]

குழந்தை

மனைவியின் முதற்குழந்தை கணவனே!

—மிஸ்டர் குழந்தையப்பன்

மணம்

மணமுள்ளமலர் மதிப்புள்ளது. காதல் கலியாணத்தில் முடிந்தால் ரோஜாத்தான்; இல்லையேல், காட்டு ரோஜா—தேடுவாரற்று சீரழியும்.

—ஒரு பூ வியாபாரி

நிம்மதி

காதல்நிரந்திரமானால் நிம்மதி நிலைக்கும்; இல்லையேல், வாடகைக்கு விடப்பட்ட வீடாகிவிடும்—காலியாகும்போது பாழடைந்திருக்கும்.

—ஒரு லாண்டுலார்டு

முடிவு

சட்டமும் காதலும் ஒன்று போல. இரண்டிலும் வாதங்கள் நிரம்பியிருக்கின்றன. பலர் எதிர்பாராத முடிவுகளைத்தான் காணுகிறார்கள். உண்மை ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது.

—ஒரு நீதிபதி

கடமை

சட்டத்தைக்காட்டிலும் கடமை பெரிது. சட்டம் இயற்றுபவர்கள் அதிகாரிகளின் காரியங்களில் குறுக்கிட்டால் அரசுகெடும். கலியாணத்திற்குப்பின் சதிபதி வாழ்க்கையில் குறுக்கிடக்கூடாது பெற்றோர்கள்.

—ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசர்

கவலை

குழப்பத்துடன் கவலைகலக்கும்போது சிந்தனை சிதறடிக்கப்படுகிறது. தென்றல் மனோரம்யமானது, புயலாக மாறும்போது மூச்சுத்திணறுகிறது. காதல் காமமாக மாறும்போது குற்றங்களுக்குக் காரணமாகிவிடுகிறது.

—ஒரு எழுத்தாளன்

சுபாவம்

விட்டுக்கொடுக்கும் சுபாவத்திற்கு அந்தஸ்தும், அந்தஸ்திற்கு அடிமையும் மேடுகள். காதலும் கலியாணமும் குன்றுகளாகிவிட்டால் தலைகுனிவுதான் ஏற்படும்.

—ஒரு பிரமுகர்

பெருமை

விதைப்பதைவிட அறுவடைதான் கஷ்டம். காதலைப்பற்றிப் பெருமை பேசலாம். அதன்பலனை அடைய காரியம்நிறைவேறுவதற்கு பக்கத்தில் நெருங்கும்போது கஷ்டம்தான் வருகிறது.

—ஒரு விவசாயி

வாத்தியம்

காற்றை குழலில் ஊதினால் மட்டும் வாத்தியம் கிளம்பாது, விரல்களும் அசையவேண்டும். மெய்க் காதலுக்கு வாத்தியம் முழங்கவேண்டும்.

—ஒரு நாதஸ்வர வித்வான்

சிறுகதை

அன்பு மனைவிக்கு......

மதுரைவாசி

ஆருயிர்க் கமலா,

மூன்று நாட்கள் இன்றோடு முடிவடைகின்றன நீ என்னை விட்டுப் பிரிந்து. பெண்கள் பித்து மனப்பான்மையினர் என்பதை நீ காட்டிவிட்டாய். என் மேல் உனக்கு அவநம்பிக்கை ஏன் ஏற்பட்டது? நான் உன் மேல் பழைய அன்புடன் இல்லையென்றாய்: என் மனமறிய உன்னை நான் என்றும்போலவே தான் நடத்தினேன். நடத்தவும் விரும்புவேன். அதற்காக நீ கோபித்துக்கொண்டு போக வேண்டுமா?

நீ கோபித்துப் பேசினாயே அப்போது எனக்கு என்ன ஞாபகம் வந்தது தெரியுமா? நாகப் பாம்பு இருக்கிறதல்லவா? அது சாதாரணமாக இருக்கும் பொழுது ஒன்றும் தெரியாது, ஆனால் கோபத்தோடு படத்தை விரித்துச் சீறுமே அப்போது பார்க்கவேண்டும் அதன் அழகை. அதேபோலத்தான் நீகோபிக்கும் போதும் உன் அழகு அதிகமாக சோபித்தது.

பிறந்தகம் போய்விட்டாய் நீ. இங்கே நான் தனிமையுடன் இருக்கிறேன். ஏகாந்தம்என்னை வாட்டுகிறது. நீ இங்கேயிருந்தால் ஆபீசைவிட்டு சரியாக ஐந்துமணிக்கெல்லாம் புறப்பட்டு மனித மூட்டைகள் அடைந்து கிடக்கும் ட்ராமின் ஓர்ஓரத்தில் வௌவால்போல் தொத்திக் கொண்டு சரியாக 5-20க்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவேன். நேற்றுப்பார் மணி ஆறாகியும் நான் ஆபீசை விட்டுக் கிளம்ப வில்லை. ப்யூன் பெரியசாமிவந்து சொல்லவும்தான் தெரிந்தது ஆபீசைமூடிவிடுவார்களேஎன்று உற்சாகமின்றிக் கிளம்பினேன். எங்கே செல்வது?

நீ இல்லாத வீடு நிலவில்லாத இரவு, நீரில்லாத நதி, மழை இல்லாத இல்லம். இவையெல்லாம் மகிழ்ச்சியையா தரும்? வேதனை நீ ஏன் போய்விட்டாய்? நம் கலியாண தினத்தை நினைத்துப்பார். காதலித்து கலியாணம் செய்தோம் என்று நான் சொன்னால் கேட்டவர்கள் நகைப்பர். காதல் கலியாணம் இப்படிப் பிரிவுதானா என்று எண்ணுவர். முடிவு காதல் என்ற பெயருக்கு மதிப்பே

கிடையாது. ஆனல் நான் உன்னைக் காதலிக்கிறேன். காதலிப்பேன். இது உறுதி.

உன்னை நினைக்கும்போது வேதனை ஓர் பக்கம். அந்த வேதனையினூடே நாம் சந்தித்த நிகழ்ச்சி மனதில் ஓட மகிழ்ச்சி மறுபுறம். நீயோ பிறந்தகம் போய்விட்டாய்.

ஏகாந்தம் என்னை சிந்திக்கச் செய்கிறது. சிந்தனைக் கயிருே உன்னைச் சுற்றியே சுழலுகிறது. என் மன இரும்பு உன்னை நோக்கியேஓடுகிறது. நீ காந்தக்கல்லா?

நம் பழைய சந்திப்பை நினைத்துப்பார்: அப்போதாவது உன் கோபம் தணிகிறதா? மனம் மாறிவிடும்கண்டிப்பாக. உடனே புறப்பட்டு வா. என் உள்ளக் கோபுரத்தில் மகிழ்ச்சி தீபம் ஏற்ற நீ ஒருத்திதான் உண்டு

நம்சந்திப்பு நினைவிருக்கிறதா? எப்படி மறக்க முடியும்? மனிதனின் வாழ்நாளில் மறக்கமுடியாத நாள் மணவிழாவன்ருே? அந்தக் கல்யாணத்திற்கு மூல காரணமான நம் சந்திப்பு மறக்கக்கூடிய நிகழ்ச்சியா?

ஆபீஸ் முடிந்தவுடன் அன்றும் வழக்கம் போலவே கடற்கரைக்குச்சென்று அமர்ந்தேன். அடிவானத்தில் கடல் அலை மோதிய காட்சியானது பார்ப்பதற்கு பரமானந்தமாயிருந்தது. காலை பத்துமணியிலிருந்து ஆபீசில் உழைத்து அலுப்பேற்பட்ட உள்ளத்துடன் வந்த நான் கடற்கரையின் சுகமானகாற்று உடம்பில் ஏறஏற குதூகலம் அடைந்தேன். நேரம் சென்றது. பகலரசன் தன் 'ட்யூட்டியை' இரவுக்குமாற்றிவிட்டு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டான்.

கார்ப்பொரேஷனின் மெர்குரி விளக்குகள் ஒளிவீசத் தொடங்கியது. கடற்கரையில் மனித நடமாட்டம் சிறிது சிறிதாகக் குறைந்தது. நானும் எழுந்திருந்தேன். அப்போதுதான் அது நடந்தது.

நான் உட்கார்ந்திருந்த இடம் ஒரு ஓட்டைப் படகின் மறுபுறம். நான்எழுந்தவுடன் அதே சமயம் மறுபுறமிருந்து ஓடிவந்த ஒருசிறுவனல் மோதப்பட்டேன். இருவருமே திடுக்கிட்டோம். அந்தப் பையன் பின்னாலேயே நீவந்தாய் நிலைமையைஉணர்ந்துகொண்டாய். "மன்னித்துவிடுங்கள் அறியாமல் செய்த பிழை" என்ருய். குயிலின்குரல் என்று கவிகள் வர்ணிப்பார்களே! குயிலின் குரல் நான் கேட்டதில்லை. உன் குரல்தான் குயிலுக்கு இரவல் வாங்கப்பட்டதோ என்று எண்ணினேன். அந்தப் பையனும் அவன்தான் உன் தம்பி— என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

நீ போய்விட்டாய். ஆனல் உன்முகம்? உன் பெயர் எனக்குத் தெரியாது. உன் குரலைக்

கொண்டு உனக்கு வானம்பாடி என்று நானே பெயர் வைத்துக் கொண்டேன்.

நம் முதல் சந்திப்பு இது தானே. உனக்கு ஞாபகமிருக்கும். ஆனாலும் எழுதுகிறேன். கோபத்தை மறந்து புறப்பட்டு வந்துவிடு. நம் இரண்டாவது சந்திப்பை எண்ணிப்பார்.

எனக்கு எப்போதுமே சினிமாப் பைத்தியம் உண்டு. அன்றும் நான் சினிமாவிற்குச் சென்றிருந்தேன். சர்க்கார் செய்திப் படம் என்ற போரடிப்பு நடந்து கொண்டிருந்தது அப்போது என் ஆசனத்திற்கு அடுத்த ஆசனத்தில் ஒரு பையன் உட்கார்ந்தான். அடுத்து ஒரு பெண். அதற்கடுத்து ஒருபெரியவர் உட்கார்ந்தார். அந்தப் பெண் வந்தவுடன் மல்லிகையின்மணம் என் நாசியைத்துளைத்தது. அதற்குள் படம் ஆரம்பித்துவிடவே மனம் படத்திலே லயித்துவிட்டது.

இடைவேளை வந்தது. திரும்பிப் பார்த்தேன். அது நீ. நீயும் என்னைப் புரிந்துகொண்டாய் என்பது உன் புன்முறுவலிலிருந்தேதெரிந்தது. உன்சிரிப்பு. அந்த முல்லைப் பற்கள். அவைகளை மறைக்கும் செவ்விதழ்கள். உன்தகப்பனார் உன்னைக் "கமலா கலர் சாப்பிடுகிறாயா?' என்று கேட்டாரல்லவா அப்போதுதான் உன்பெயர் கமலாஎன்றுதெரியும்

சிறிது நேரத்தில் விளக்குகள் அணைக்கப்பட்டு திரையில்விளம்பரங்கள் காண்பிக்கப்பட்டன. அப்போது "வருகிறது—கமலாவின் காதலன்'' என்று காண்பிக்கப்பட்டதே; நான் சும்மா இருந்திருக்கக்கூடாதா? சும்மா இருக்கும்பருவமா அது? "கமலாவின் காதலன்'' என்ற ஸ்லைடை பார்த்தவுடன் உன் பக்கம் திரும்பி "யாரு?'' என்று கேட்டேன். நீ என்ன செய்தாய்? திரும்பிப் பார்த்தாய். அந்தப் பார்வையிலே கோபமா? வருத்தமா? அன்றி விருப்பமா? இருட்டில் ஒன்றுமேபுரியவில்லை.

அதன்பின் உன்னை நான் பல தடவை கடற்கரையில் பார்த்திருக்கிறேன். நீ, உன் தந்தை, தம்பி மூவரும் ஒருபக்கம் உட்கார்ந்திருப்பீர்கள். நான் எதிர்த்தாற்போலிருப்பேன் ஒருநாள் நீ என்னவோ என்னைக் காட்டினாய். உன் தகப்பனார் என்னை நோக்கி வந்தார். எனக்கு உடம்பு உதறல்எடுத்தது என்னதான் காதலானாலும், பெரியவர்கள் ஒப்புக்கொள்வார்களா? முதுகுப் பலம் பார்க்கமாட்டார்களா?

உன் தகப்பனார் என் பக்கத்தில் வந்து அமர்ந்தார் "சார் நீங்கள் எந்த ஊர்?'' என்றார் 'வாக்கிங் ஸ்டிக்'கைத் தடவிக் கொண்டே. என் உள்ளமோ "வந்ததடா விபத்து'' என்று

அலறியது ஆனால்? உன் தகப்பனார் எல்லாவற்றையும் சொன்னார். நீ என்னைத்தான் கல்யாணம் செய்துகொள்வேனென்று ஒற்றைக் காலில் நிற்கிறாயாம்? கொக்கா என்ன ஒற்றைக்காலில் நிற்க? பிறகென்ன உன் தாய் சம்மதம் கிடைத்தது. எனக்கு? நான்தான் அப்போது அனாதையாயிற்றே? பெற்றதாயை எட்டு வயதிலும், உற்ற தந்தையைக் கல்லூரியில் படிக்கும்போதும் இழந்தவனாயிற்றே. ஹோட்டல் சாப்பாடுதான் என்னை வளர்த்தது.

உன் சுற்றம் சூழ, என் அரட்டை நண்பர்களின் கேலிப் பேச்சிடையே நம் திருமணம் முடிவுற்றது. அதன் பின் நாம் தனிக் குடித்தனம் வந்தோம்.

இதெல்லாம் எட்டுமாதத்திற்கு முந்திய கதை. இப்போது நீ இங்கில்லை. உண்மையாகச் சொல்கிறேன் கமலா அன்று போலத்தான் இன்றும் உன்னை நேசிக்கிறேன்.

ஆபீசில் கடந்த ஒருவாரமாக கடுமையான வேலை. அதற்குப் பின்னால் ஒருவார லீவு கிடைக்கும். இந்த லீவை உன்னுடன் 'ஜாலி'யாகக் கழிக்க வேண்டும் என்ற ஆவல் உன்னிடம் அதைப் பற்றி கூறவில்லை.

ஆபீசிலிருந்து வந்தவுடன் நீ சினிமாவிற்கு கூப்பிட்டாய். அலுத்து வந்த நான் எப்படி வரமுடியும்? நீ பலபல பேசினாய். உன்னை விரும்பவில்லை என்றாய். நானும் பேசினேன். முடிவு? நீ பிறந்தகம் கிளம்பி விட்டாய் சரி போகட்டும். ஒருவார லீவு வந்தால் உன்னை வந்து அழைத்து வந்துவிடலாம் அல்லது ஒருவார லீவு மாமனார் வீட்டில் 'கேம்ப்' என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

நீ போய்விட்டாய் எனக்கு தனிமை பிடிக்கவில்லை. நாம் லீவை இங்கேயே கொண்டாடிக் கொள்ளலாம். நம் பழையநாள் காதலர்களாகவே இருப்போம். தம்பதிகள் சண்டை நமக்குள் வேண்டாம். உடனே புறப்படு.

இப்படிக்கு,
தேவியை எதிர்கொண்டு
அழைக்கக் காத்திருக்கும்
பக்தன், கருணாகரன்.

மகிழ்ச்சி
ஆண்டுச்சந்தா ரூ. 3
மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

இவைகள் வேண்டும்!

— சொ. இராசன் —

அறியாமை நம்மிடையே அகல வேண்டும்
அடிமையெனும் சொல்லடிமை ஒழிய வேண்டும்!
ஆர்ப்பாட்டம் செய்வோர்கள் மடிய வேண்டும்
ஆனமட்டும் நம்மிடையே அன்பு வேண்டும்!

இன்பமுடன் நந்தமிழர் வாழ வேண்டும்
இங்கில்லாப் பொருளதனை அழைக்க வேண்டும்!
ஈவிரக்க மில்லாதார் ஏக வேண்டும்
ஈசனருள் என்பாரும் போக வேண்டும்!

உள்ளத்தில் கள்ளமில்லா ராக வேண்டும்
உண்மை, தயை வாழ்விதனைக் கொள்ள வேண்டும்!
ஊர்மக்கள் ஓரினமாய்ச் சேர வேண்டும்
ஊதாரி வாழ்விதனை ஓட்ட வேண்டும்!

எல்லோரும் மாந்தரென நினைக்க வேண்டும்
எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும்!
ஏழை, பணக் காரரினம் போக்க வேண்டும்
ஏர்முனையும், போர்முனையும் காக்க வேண்டும்!

ஐயரெனும் அந்தஇனம் அழிய வேண்டும்
ஐவர்துணை சாமியென்ப தொழிய வேண்டும்!
ஒற்றுமையாய் நம்மினத்தார் செழிக்க வேண்டும்
ஒய்யார வாழ்வதனை ஒழிக்க வேண்டும்!

ஓயாத இனப்பூசல் ஒழிய வேண்டும்
'ஓங்காரி', 'ரீங்காரி' அழிய வேண்டும்!
ஒளவையார் தொன்மொழியும் குறளும் வேண்டும்
ஒளடதமே ஆனதால் இவைகள் வேண்டும்!

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

கிறிஸ்டி தங்கராஜ், மதுரை.

மனிதன் எப்போது எதையும் பகுத்தறிவுகொண்டு ஆராய்வான்?

கடவுளும் கைவிட்டார் என்ற எண்ணம் தோன்றும்போது

உண்மையான அன்பை எவ்வாறு அறியலாம்?

செய்ந்நன்றி மறவா செம்மையிலிருந்து அறியலாம்.

அறிஞர் என்றால் யார்? ஆசிரியர் என்றால் யார்?

முன்னவர் ரேடியோ; பின்னவர் கிராமபோன்.

M. சீனிவாசகப்பெருமாள், பெரியகுளம்.

திராவிடநாடு பிரிந்தவுடனேயே, கம்யூனிசம், சோஷலிசம் இவை இரண்டில் எது மலரும்?

குழந்தை பிறந்தால் பேருக்கா பஞ்சம்!

ஏழ்மையில் மூழ்கியிருக்கும் ஒருவன் அறிஞனானாலும் அவன் சமுதாயத்தில் அறிமுகப்படமுடியாமல் போவதற்குரிய காரணம் என்ன?

இல்லானை இல்லாளும் வேண்டாள்.

அ. சோணை, மதுரை.

வருங்கால மக்களுக்கு எது தேவை?

மகிழ்ச்சி நிறைந்த வளமான வாழ்க்கை.

எஸ். பாலராசன், கோவில்பட்டி.

மனிதன் பிறக்கும்போது சந்தோஷப்படுவதிலும், இறக்கும்போது வருந்துவதிலும் உள்ள அர்த்தம் என்ன?

புதிய உயிர் ஒன்றை உண்டாக்கிவிட்டோம் என்ற எண்ணத்தில் சந்தோஷம். அது என்றாகிலும் ஒருநாள் அழியும்என்ற இயற்கைநியதி இருப்பது தெரிந்தும், அதை இழக்கும்போது, அதைத் திரும்ப காணமுடியாது என்ற எண்ணம் தோன்றும்போது வருத்தம் உண்டாகிறது. இரண்டும் மனிதரின் ஆசையாலும், அறியாமையாலும்நிகழ்வது

த. ரா. பழனியப்பன், தாராபுரம்.

'காதற் கட்டில்' முடிந்துவிட்டபடியால், அடுத்ததொடர்கதை என்ன?

பல நேயர்கள் இதுபற்றிக் கேட்டுள்ளார்கள். தற்சமயம் திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் 'முள்'தொடர்கதை வந்துகொண்டிருக்கிறதே! நமது ஆசிரியர் எழுதும் புதியதொடர்கதைபற்றி பின்னால் அறிவிக்கப்படும்.

M. மீனாட்சிசுந்தரம், குடந்தை.

சுபாஸ் சந்திரபோஸ் இருக்கிறாரா, இறந்துவிட்டாரா?

விமானவிபத்தில்இறந்துவிட்டதாகவே இந்திய சர்க்கார் தீவிர விசாரணையின்பின் அறிவித்துள்ளது. சிலர்கூறுவதுபோல் அவர் உயிருடன்இருந்தால், அண்ணல் காந்தியடிகளின் ஆவி பிரிந்த

செய்தி கேட்டு அவனியே அனுதாபப்பட்டபோது, அலறியடித் துவந்துசேர்ந்திருக்கமாட்டாரா? அல்லது அனுதாபச் செய்தியாவது விடுத்திருக்கமாட்டாரா?

ஜாதி, மதங்கள் உண்டாகக்காரணங்கள் யாவை?

எவ்வித வித்தியாசமுமின்றி இன்புற்றிருந்த திராவிடமக்களிடையே, ஆடுகளுக்கு வேண்டிய ஆகாரம் தேடி கைபர் கணவாய் வழி உள்ளே நுழைந்த ஆரியர்களின் கைங்கரியத்தால் இந்நாட்டில் ஜாதி, மத வேறுபாடுகள் ஏற்பட்டன என்று சரித்திரம் கூறுகிறது. இந்நிலை நாளடைவில் பொருளாதார ஏற்றத் தாழ் வாலும், ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்களாலும் நன்கு வேர் ஊன்றிவிட்டது

தஞ்சாவூர் பிரகதீஸ்வரர்ஆலயத்தைக்கட்டியது யார்? அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுக.

கி. பி. 985-1014வரை சோழ நாட்டைஆண்ட இராஜஇராஜன் மேற்பார்வையில் எண்ணற்ற சிற்பக்கலைஞர்களால்கட்டப்பட்டது. இவர்கள் அனைவரின் வரலாறும் எச்சரித்திரத்தைப்புரட்டினாலும் சிக்காது. ஆனால் அஸ்திவாரக் கல் நாட்டிய, அந்த அரசர் வரலாறு தெரிய சரித்திரப் புத்தகத்தைப் புரட்டிப்பாருங்கள்.

ஞா. சுந்தரராஜு, பெரியகுளம்.

இதுவரை தமிழ் நாட்டில் வெளியான படங்களின் பெயர்களைக் கொடுக்க முடியுமா?

மகிழ்ச்சி சினிமா ஞாபக சோதனைப் போட்டியில் கலக்க, 'கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும்' வீரர்படையில் சேர விரும்புகிறீர் என்று யாரும் கேலி செய்யப்போகிறார்கள், பேசாமல் கேள்வியை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள்.

ஐப்பசி மகிழ்ச்சி அட்டையில் காமினிகௌசல் படம் போட்டதின் நோக்கமென்ன?

பின்னால் நிழல் உருவம், முன்னால் மகிழ்ச்சி வதனம் பொங்கும் வனிதை, பிளாக் செய்தவரின் திறமை, எங்கள் அச்சுக்கலையின் அபூர்வவேலை.

V. காதர்மைதீன், சோழமாதேவி.

விபசாரியான ஒரு பெண்ணின் அழகைக்கண்டுஒருவாலிபன்கல்யாணம் செய்துகொண்டால் அவளது விபசாரிப் பட்டம் மாறுமா? அல்லது அவள் சாகுமளவு இருக்குமா?

பற்றி ஏற கொழுகொம்பு இல்லாத சூழ்நிலையில் அவள் விபசாரியாகியிருக்கலாம். ஆனால் தனக்கு என்று சரியான கணவன் ஒருவன் கிடைத்து முறையுடன் வாழ்க்கையை செவ்வனே நடத்தி வந்தால் நாளடைவில் அவளுக்கு ஏற்பட்ட அவமானச் சொல் நீங்கிவிட ஏது உண்டு.

ஆணுக்கு சுகம் எங்கே இருக்கிறது? பெண்ணுக்கு சுகம் எங்கே இருக்கிறது?

ஆணுக்கு அன்பு மனைவியிடமும், பெண்ணுக்கு ஆசைக் கணவனிடமும் சுகம் கொஞ்சி விளையாடும்.

பேபி or கார்?

[S. P. K. பாலகிருஷ்ணன் M. A.]

இந்திய மக்களுக்கு பலவகைகளில் குறைகள் இருந்தபோதிலும் மக்கள் எண்ணிக்கையில் மட்டும் குறைச்சலேகிடையாது. இந்தியாவின் தற்போதைய ஜனத்தொகை, அரசியல்வாதிகளுக்கும், பொருளாதார நிபுணர்களுக்கும், சமூகசீர்திருத்தவாதிகளுக்கும் ஓர் ஓயாத தலைவலி. இந்தியர்களின் வாழ்க்கைத் தராதரத்தைக் குறைக்காமல், ஜன உற்பத்திக்கு ஏற்ப அதே விகிதத்தில் உணவு உற்பத்தியுமிருந்தால் இந்தியர்களின் எண்ணிக்கை ஒரு பிரச்சனையாகத் தோற்றமளிக்காது.

ஒவ்வொரு வருடத்திலும் 40 லட்சம் ஜனங்கள் அதிகப்படுவதில்மட்டுமல்ல இந்தச் சிக்கல். இதைவிடமுக்கியமானது, ஜனத்தொகை கூடக்கூட ஜனங்களுடையதன்மை (quality)—உடல் வலிமை முதலியன—குன்றிவிடுகிறது. ஆகவே, ஜனத்தின் எண்ணிக்கைக்கும் (quantity) தன்மைக்கும் (quality) தக்க சம்பந்தமிருக்கிறது.

தற்போதையஉலகில் இந்தியா ஒரு சிறந்த இடம் பெற்றிருப்பதற்குக் காரணம் இந்திய மக்களின் எண்ணிக்கையே. இந்தியா—பாகிஸ்தான் இவ்விரண்டு நாடுகளின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும்.

பொதுவாக,ஜனத்தொகையை நிர்ணயம் செய்வன யுத்தமும், பிணியும், பஞ்சமுமாகும். இம் மூன்றில் ஏதாவது ஒன்று தலைவிரித்தாடினால் போதும் ஜனத்தொகை குறையும். ஆனால் இம் மூன்றுமில்லாமல்போனால் ஜனத்தொகை தங்குதடங்களில்லாமல் கூடிவிடும்.

எளிதில் கருத்தரிக்கும் சக்தி தட்பவெட்பநிலையால் நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுவதுமட்டுமல்ல, ஒரே நாட்டிலே ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒவ்வொரு வகுப்பினருக்கும் வித்தியாசமாக இருக்கிறது. நகரங்களில் வசிக்கும் மக்களைவிட கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு இத்தன்மை அதிகம். கிராமத்தில் போதுமான பொழுது போக்கு கிடையாது. நகரங்களில் வாழும் பெண்களின் விகிதம் ஆண்களைவிட குறைவு. அநேக தொழிலாளர்கள் குடும்பத்துடன் வந்து குடியேறியிருக்கமாட்டார்கள் நகரங்களில். மேலும் நகரங்களில் சிசுக்களின் மரணம் அதிகம்.

மத்திய வகுப்பினர்களிடையேயும், அதிக வருமானம் வரும்

பணக்காரர்களிடையேயும் குழந்தைஉற்பத்தி குறைவு. இதற்கு காரணம் இவர்களெல்லோரும் கர்ப்பத்தடையை (Birth Control) பின்பற்றுகிறார்களென்று சொல்லமுடியாது. கல்வி, உயர்ந்த வாழ்க்கைத்தரம், சிறந்ததொழில், போதுமான ஏனைய பொழுது போக்கு வசதிகள் இருத்தலாலேயே.

இந்தியாவில் இறப்பவர்களின் சதவீதம் அதிகம். 100க்கு 25 குழந்தைகள் ஒரு வயது அடைவதற்குள் இறக்கின்றன. 40 சதவீதம் ஐந்து வயதிற்குள்ளும், இருபது வயது அடைவதற்குள் 50 சதவீதமும் இறந்துவிடுகின்றனர். ஒவ்வொரு வருஷமும் 2,00,000 பெண்களுக்கு மேல் பிள்ளைபிறக்கும்தருவாயில் இறக்கிறார்கள். இதில் இளம் பெண்களே (girl-wives) அதிகம். காரணம் இளம் வயதில் கல்யாணம்—திடகாத்திரமற்ற உடம்பு—மருத்துவ விடுதிகள், சாதனங்களின் பற்றாக்குறையே ஆகும். மருத்துவசிகிச்சையில் சிறு முன்னேற்றம்ஏற்பட்டாலும்போதும், உடனே 40 லட்சமென்ன 80 லட்சம், ஒவ்வொரு வருடமும் இந்தியாவின் ஜனத்தொகை கூடும். ஒவ்வொரு வருடமும் மலேரியா ஜுரத்தால் 10லட்சம் ஜனங்கள் இறக்கின்றனர். இந்தப் பத்து லட்சம் இறக்கவேண்டுமானால் ஒருகோடி ஜனங்கள் எப்படியும் இந்த வியாதியால் கஷ்டப்பட வேண்டும். மேலும் காலரா, அம்மை; வயிற்றோட்டம், குஷ்டம், க்ஷயரோகம், குருடு, கிறுக்கு முதலிய பிணிகளால் அநேகர் பீடிக்கப்பட்டு, போதிய வைத்திய உதவி இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்

இந்தவியாதியஸ்தர்களை சமூக பாரமாக நினைக்கவேண்டியதிருக்கிறது. இவர்களால்வேலைசெய்து பொருளாதார உற்பத்தியைப் பெருக்க முடியாதிருப்பதுடன், ஏனைய பொருள் உற்பத்தியில் பெரும் பகுதியை இவர்களுக்கென செலவிட வேண்டியதிருக்கிறது. இவர்களெல்லோரும் இந்திய மக்களின் மொத்தஎண்ணிக்கையில்சேருபவர்கள். பொருள் தேவைகளில் பங்கெடுத்துக் கொள்வார்கள், ஆனால் பொருள் உற்பத்திக்கு இவர்கள் எவ்வித உதவியும் செய்ய முடியாத நிலையில் இருப்பவர்கள். இந்தக் காரணங்களுக்காக இவர்களைப் புறக்கணிக்க முடியாது. ஆவன செய்து ஆக்க வேலைகளுக்கு இவர்கள் பயன்படும்படி செய்ய முயற்சிக்கவேண்டும்.

தற்போதைய இந்திய ஜனத்தொகையைக் குறைக்க வேண்டுமானால் முதலாவதாக உணவுஉற்பத்தியைப் பெருக்க வேண்டும். பால்ய விவாகத்தைத் தடுத்து, பெண்களை 20வயது வரை கல்வி பயிலும்படி செய்ய வேண்டும். நாட்டிலேசுபிட்சமானவாழ்க்கை நடத்த பெரிய தொழிற்சாலைகள்

நேயர் தபால்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தி மக்களின் தேவைக்கு ஏற்ப உற்பத்தியைப் பெருக்கி, வாழ்க்கைத்தராதரத்தை உயர்த்த வேண்டும். கடைசியாக கற்பத்தடை (Birth Control) முறையைக் கையாளவேண்டும். சுலபமான முறையில், சிக்கனமான செலவில், மக்களுக்குநம்பிக்கையூட்டும் அளவில் அரசாங்கத்தினர் ஆரம்பித்து வைத்து இதை வரவேற்க வேண்டும்.

தற்காலத்தில் இந்த நிலைமைக்கு மக்கள் மாறி வருகின்றனர். ஒருகுழந்தையைவளர்க்கச் செலவிடும் பணத்தில் ஒருகார் வைத்திருக்கலாம். இரண்டு குழந்தைகள் பெற்ற தம்பதிகளிடையே 'பேபி' வேண்டுமா அல்லது 'கார்' வேண்டுமா என்ற பிரச்சனை வந்துவிட்டால், சகஜமாக கார்தான் ஜெயிக்கக்கூடிய நிலையில் இன்றைய நாடு மாறிவருகிறது.

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.

ஐயா, இன்று பெண்மையைப் புண்மைப்படுத்தும் புல்லர்களை அதிகம்காண்கிறோம். வீர மறக் குலத்து தமிழ் மங்கை வேறு ஆடவரைக் கண்ணெடுத்தும் பாரார். தன் பசப்புமொழியால், அழகு சொல்லால் அவளை காதலில் விழவைக்கும் ஆண்கள் வீணர்கள். மணமானவுடன் ஒருசிலநாள் சுகித்துவிட்டு ஓடிவிடும் உலுத்தர்கள். இவர்களை "தமிழ் மக்கள்" தனிமன்றத்தில் நிறுத்தி தூக்கிலிடவேண்டும். அன்றி ஒரு துளி விஷத்தைக் கொடுத்து சாகடிக்க வேண்டும். பெண்மைக்கு இழுக்குத் தேடும் பேயர்களை பாரில் இருக்கவொட்டாது அழிக்கவேண்டும். ஒழுக்கத்துக்கும், பண்புக்கும் மதிப்புக்கொண்ட 'தமிழ்ப்பெண்கள்' பரம்பரையில் பிறந்த வனிதையர் காமுகர்களின் காதல் மொழிகளில் கருத்தைப் பறிகொடுத்து, சமுதாயத்தின் இழிநிலைப் பிண்டமாக மாற வேண்டாமென்று வேண்டிக்கொள்கிறேன்.

கே. பி. ராஜகோபால், சென்னை.

* * * *

அன்புள்ள ஆசிரியரே,

சினிமா வேண்டும்; அதில் சீர்திருத்தமும்வேண்டும். தென்னாட்டில் இளம் கதாநாயகன் பாத்திரத்திற்கு கிழ கதாநாயகனைத்தான்பார்க்கிறோம். ஆனால் வடநாட்டைப்போல் புதுமுகங்கள் எடுக்கவேண்டும். இதனால் படத் தயாரிப்பாளருக்கு பணச்

செலவு குறைகிறது. சினிமாவில் சேர விரும்புகிறவர்கள் பள்ளியிலும், காலேஜ்களிலும் துடித்துக் கொண்டிருக்கின்றனர். ஏனென்ருல் இப்போது (தமிழ்) சினிமாவில் கிழகதாநாயகர்களைப்பார்க்க சகிக்க முடியவில்லைபோலும். சினிமாவில் பலஊழல்கள் இருப்பதாகத் தெரிகிறது. இவையனைத்தும் ஒழியவேண்டும்.

இந்தியா உலகத்திலேயே படப்பிடிப்பில் இரண்டாவதாக திகழ்கிறது.

புதுமுகங்களுக்கு நீங்கள் உதவி செய்யலாம். படத்தயாரிப்பாளர்கள் நமது சிறந்த பத்திரிகையான 'மகிழ்ச்சி'யை படிப்பர் என கருதுகிறேன். ஆதலால் ஆர்வமுள்ள புதுமுகங்களின் குறிப்பு, விலாசம், முடிந்தால் புகைப்படம் முதலியவைகளை நமது பத்திரிகையில் பிரசுரித்து உதவி செய்யலாம்.

ஏ. எஸ். ஜேம்ஸ், பெங்களூர்.

* * * *

சீர்கேடாகி வரும் மூட பத்திரிக்கை சமுதாயத்தில் பெரும்பாலும் ஆதாரமற்ற கற்பனைகளைக் கதையாக எழுதி வருகிருர்களே தவிர தொழிலாளிகளின் தொல்லைகளையோ, விவசாயிகளின் வேதனையையோ, ஆலைத் தொழிலாளியின் கூலிக்குறைவையோ, பெண்களின் பெருமையையோ, தமிழனின் தனியாட்சிக்காகவோ பாடுபடுவது கிடையாது.

ஆனல் "மகிழ்ச்சி" ஏடு அப்படியல்ல! தொழிலாளிகளின் துயர்நிலையை விளக்குகிறது! குடும்ப வாழ்க்கைக்கு ஒரு நல்ல தூண்டுகோலாக இருக்கிறது. நாட்டில் நலிந்துள்ள ஒவ்வொரு குறைகளையும் விளக்குவதுமல்லாமல் தவறி நடப்போரையும் திருத்துகிறது.

தென்ஞட்டு மக்களிடையே 'மகிழ்ச்சி' மகிழ்ச்சியாகவே தன் பணியைச் செய்து வருகிறது. 'மகிழ்ச்சி' மலர்ச் சோலையிலே, அறிவுமலர் அதிகம்! அதனைப் பருக வாசக வண்டுகளோ ஏராளம். மாதமொருமுறை பூக்கும் மலரில் தேங்கும் தேனை எதிர்பார்த்து ஏங்கிக் கிடப்போர் எத்தனையோ பேர். மலரில் வள்ளுவனின் வாய் மொழிகள் வனப்புள்ள இதழ்களாகவும், செந்தமிழ் எழுந்து நடை மனதை மயக்கும், வாசகர்களுக்கு விருந்தாகவும் விளங்குகிறது. சுருங்கக் கூறின் தென்ஞட்டவர்க்கு தெவிட்டாது தித்திக்கும் தேன் "மகிழ்ச்சி"!

ஆசிரியர் சதானந்தம் அவர்கள் நேயர்களை சதா ஆனந்தத்துக்குள்ளாக்குகிருர். மகிழ்ச்சி மலரின் மணம் பரவட்டும்!

எஸ். பாலராசன், கோவில்பட்டி.

[நேயர்கள் இனி இப்பகுதியில் 'மகிழ்ச்சி' இதழ்களைப் புகழவதையே பெரிதாகக் கருதாது, மக்கள் மறுமலர்ச்சிக்கான கருத்துக்களில் கவனம்செலுத்தி (கார்டில்) எழுத வேண்டுகிருேம். —ஆசிரியர்]

MADRA

விமர்சனம் சியாமளா 'மகிழ்ச்சி'

முக்கிய நடிகர் நடிகைகள்: M. K. தியாகராஜ பாகவதர், ஸ்டண்ட் சோமு, ரேலங்கி, S. வரலக்ஷ்மி, ஆஷலதா, T. திலகம், T. கனகம் மற்றும்பலர்

கதை: காலத்திற்கும் கருத்திற்கும் ஒவ்வாத குப்பை. குப்பையில் குண்டுமணி என்றுகூற ஒரு சிறு பகுதிகூட இல்லை. 10, 12 ஆண்டுகளுக்குமுன் வந்திருந்தால், பாமர மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கும், இந்தத் திடீர்தோன்றல் சாது, மாலை மாய பஜார் வேலைகள். கடவுள் உண்டு, அவர் தான் சகலத்தையும் ஆட்டிப் படைக்கிறார் என்று சிறுபிள்ளைகளைப் பயமூட்ட கூறவேண்டிய சிறுகதையை சினிமாவாகப்படம் பிடித்து சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளார்கள்.

வசனம்: ஜீவனற்றச் சிதறி உதிர்கின்றன, உதயகுமாரின் வசனங்கள்.

பாடல்: பரவாயில்லை என்று கூறும்படியான அம்சம் இது ஒன்று. பாகவதருக்கு கச்சேரி செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது பல பாடல்கள் மூலம், இப்படத்தில்.

நடிப்பு: இப்படி ஒன்று இப்படத்தில் தோன்றியவர்கள் மேற்கொண்டார்கள் என்றுகூற நமக்குச் சந்தர்ப்பம் விட்டுவைக்கவில்லை. 'நடிப்பு பரவாயில்லை' என்று முன்புநடித்தபடங்களில் நம் கவனத்தைக் கவர்ந்தவர்கள் கூட இதில்ஏமாற்றிவிட்டார்கள்.

டெம்போ: டெம்பரவரியாகக் கூட கிடையாது. விமர்சனம் எழுதவேண்டுமென்பதற்காகவே விழித்திருந்தேன். பலர் காசைக் கொடுத்துவிட்டு தூங்கிக்கொண்டிருந்தார்கள். படம் முடிந்த பொழுது கேட்கீபர்வந்து எழுப்பிவிட்டார்.

பொதுவாக: பாகவதர் இனி படங்களில் நடிக்க வரக்கூடாது. அப்படியே ஆசை இருந்தாலும் கதாநாயகன், காதல், சிருங்கார ரசம் இவைகளில் கண்டிப்பாக தலைகாட்ட வேண்டாம். பாகவதர் மேலுள்ள பற்றுதலால் பச்சையாக இதைக்கூறுகிறோம். வீணே கௌரவத்தைக் குலைத்துக்கொள்ள வேண்டாம். M.S.

சுப்புலக்ஷ்மி ஒதுங்கியதுபோல் ஒதுங்கிவிடுவதுதான் நல்லது. சங்கீத ஞானத்தை கச்சேரிகள் மூலம் கண்ணியமாக நிறைவேற்றிவரலாம். கேஸ் விஷயமாக விட்ட பணத்தைக் கூட்டி அள்ள வேண்டுமென்ற அவாவால் அடி பாதாளத்தில் தள்ளும் சதிக்குள் சிக்கவேண்டாம். ஒருகாலத்தில் பாகவதர் படமென்றால், அதற்கிருந்த செல்வாக்கே தனி. ஆனால் இன்று? ராஜமுக்தியில் பட்ட உதையால், விநியோகஸ்தர்கள்கிடைப்பதே அரிதாகிவிட்டது. அதுமட்டுமல்ல, நகரங்களிலுள்ள தியேட்டர்கள்கூடத் தயங்குகின்றன திரையிட.

பாகவதருடன் நடிக்கச் சந்தர்ப்பம் கிட்டாதா என்று ஏங்கிக்கிடந்த நடிகைகள் எண்ணற்றபேர் அன்று.

பாகவதருடன் நடிக்கவா? அதுவும் காதல் கட்டமா? அப்படியானால் எனது ஒப்பந்தத்தை ரத்துச் செய்துகொள்ளுகிறேன் என்று நடிகைகள்கூறும் கட்டம் வருவதற்குமுன், பாகவதர் 'டங்கர்க்' செய்துகொள்ள வேண்டும் வெற்றிகரமாக என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவருக்கமைந்துள்ள சங்கீத ஞானம், கந்தர்வகானம், குளிர்மையும், இனிமையும் கொண்ட தொனி குன்றின் மேல் இட்ட விளக்கென சங்கீதமேடைகளில் பிரகாசிக்க வேண்டும்.

முன்னேறி வரும் இளம் நடிகர் நடிகைகளின் களியாட்டங்களுக்குமுன், இவர்போன்ற வயதானவர்களின் லீலா விநோதங்கள் கொஞ்சமும் பொருந்தாது என்பதை உணர்த்துகிறோம். சினிமாஉலகில் இன்னும் கொஞ்சகாலம் பெயர் இருக்கவேண்டுமென்று விரும்பினால், முக்கிய பாத்திரமேற்றுநடிப்பவர்களுக்கு இரவல் குரல் கொடுக்கலாம் இதனால் கௌரவம் ஒன்றும் குறைந்துவிடாது. ஒன்றுக்கும் உதவாதார் என்று ஒதுக்கப்பட்டிருந்த சிதம்பரம் ஜெயராமன் கூட இன்று பின்னணிப்பாடல் மூலம் முன்னிடம் பெற்றுவிட்டார். இதுதான் பாகவதருக்கும் 'காலத்தையொட்டி வாழும் வழி' என்று கூற விரும்புகிறோம்.

வரலக்ஷ்மி போன்றோருக்கு இப்படம் ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும். தகப்பன்போன்று அமைந்தகதாநாயகனிடம் காதல் கட்டத்தில் தளுக்கிமினுக்குவது பார்ப்போருக்குச்சிரிப்பைத்தான் உண்டாக்குகிறது முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை இப்பேர்ப்பட்ட படம் வரலக்ஷ்மிக்கு.

திரையிடப்பட்ட மூன்றுநாட்களிலேயே தியேட்டரைக் காற்றுட விடும் மட்டரகமான படவரிசையைச்சார்ந்தது சியாமளா. பாகவதர் மீது கொண்ட அன்பால், வீணாக இரண்டு பக்கங்களை விரயம் செய்துவிட்டோம் விமர்சனம் எழுதி.

றம் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும். எனவே இலட்சியக் கடமையையாற்றிவரும் வீரனுக்கு காதல் தடையாக இருக்குமானல், 'சற்றேஜதுங்கிநில்' என்று கூறி கடமையை நிறைவேற்றுவதுதான் இருபாலருக்கும்நியதி.

அ கிருஷ்ணன், குணியமுத்தூர்.

* * * *

இதே கேள்விதான் அன்று அம்பிகாபதியின்முன்னும் ஜவக்கப்பட்டது. தந்தைக்குப் பணிதலென்னும் கடமையை மறந்து அவன் காதலைப்பெரிதென மதித்தான். காதலும் கடமையும் மனிதன் தோன்றிய நாள்தொட்டே போட்டியிட்டிருக்கவேண்டும்.

காதலுக்காகக் கடமையையும் கடமைக்காகக்காதலையும் வெறுத்தோர்பலர். ஆனல் இவை ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவைகளாகத் தோன்றினும் உண்மையில் நெருங்கிய உறவு கொண்டவை; தக்கபடி பயன்படுத்தினல் வாழ்க்கையில் வெற்றிதரக் கூடியவை.

ஒருவர் தன் பெற்றோருக்குப் பணிதலென்னும் கடமையை மறந்து காதலைப் போற்றினல் அவர் கடமையைச் சாகடித்தார் என்று பொருளல்ல. அவரும் தன் காதலுக்குச் செய்யவேண்டிய கடமையைத்தான்செய்தார். காதலிலும் கடமை உண்டு. பெற்றோரும் தம் பிள்ளைகள் கொண்ட காதல் உண்மையானதானல், அதை அனுமதிப்பது

கார்டு போட்டி 3

எனது ஒருநாள் ஆசை

பரிசு ரூ. 1

கார்டின் ஒரேபக்கத்தில் எழுதி 31–12–52க்குள் அனுப்பவும்.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

'பிள்ளைகளின் வாழ்வை இன்பமாக்கவேண்டிய' தன் கடமையைச் செய்ததாகவே அர்த்தம். இதனல் அவர்களின் வாழ்க்கையில் ஓர் பற்றும், பாசமும் ஏற்படும். கடமையில் காதல்இருப்பதும் விளங்கும்.

குலோத்துங்க மன்னன் மகளின் வாழ்வை மலர்விப்பதைத் தன் கடமையாகக் கொண்டிருந்தால் ஏற்பட்டிருக்குமா அந்தக் காதல் பலி? மறப்பாளா அமராவதி இறந்தாலும்? ஏற்றத்தாழ்வு என்ற இழிவு மனப்பான்மை மாறவும்இங்கே வழி உண்டு.

ஆகவே இப்படிப்பட்ட கட்டங்களில் காதலா? கடமையா? என்ற புதிர்க் கேள்வியை எழுப்பாது காதலில் கடமையும் கடமையில் காதலும் நிறைந்திருப்பதை உணர்ந்தால் உண்மையில் வாழ்வில் வெற்றியும் மகிழ்ச்சியும் நிச்சயம் உண்டு.

தெய்வநாயகம், செவலார்பட்டி.

[★ அடையாளமிட்ட கட்டுரை எழுதிய பழ. பாலசுப்பிரமணியம், புலவர் தெரு, இராயகிரி என்பவருக்கு ரூ. 1 பரிசு அனுப்பப்பட்டது]

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,

L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:

A. ராமகிருஷ்ணன் 7/321, தெப்பம் மேல்பஜார்.

தனி அரசு

ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

தைப் பொங்கல் மலர்.

கண்ணைக் கவரும் வனப்புடன்,
கருத்தை அள்ளும் கதை கட்டுரைகளுடன்
தைப் பொங்கலன்று வெளிவரும்.

விலை 8 அணா

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

தனி அரசு :: விருதுநகர்.

சத்திய வேதமாகிய பைபிளை ஆழ்ந்து படிக்க வேத மாணாக்கர் ஐக்கிய சங்கத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டிருக்கும் வேதோபதேசவினாவிடை என்ற புஸ்தகம் எங்களிடம் கிடைக்கும்.

விலை: சாதா பைண்டிங்
ரூ. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

1, 3, 5, 7, 14, 20 பவுண்டு டின்களில் காபி பவுடர் சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.
சிக்கரி கலந்த காபி பவுடரும் கிடைக்கும்.

எட்வர்ட் காபி ஒர்க்ஸ், விருதுநகர்.

Regd. No. M. 5483. MAHILCHI Dec-Jan. 53.

காரம், குணம், மணம் நிறைந்தது
எங்கும் எப்பொழுதும் கிடைப்பது
பீடி சக்கரவர்த்தி

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடி

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலே,
முக்கூடல் P. O. (திருநெல்வேலி ஜில்லா.)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் கா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.